போன் நெ. 15. விலை 2 அணா. REGD NO. 4642

திராவிடநாடு

மலர் 13 | 4—7—54 | இதழ் 1

[கருத்தளிக்கும் கற்பனை]

அவர்கள் பேசாதது!

[பரதன்]

கனம் காமராஜரும், கனம் ராமசாமியும் சந்திக்கிறார்கள்! கற்பனைக் காட்சி!

*

என்ன பேசுகிறார்கள்? அது, இது! வெறும் கற்பனைதான்!

*

ஆனால், நிலைமையை ஆராய்ந்தால் இப்படித்தான் பேசமுடியும் என்பது புரியும்!

*

இந்த உரையாடல் நடைபெற்றதாகத் தயைகூர்ந்து எண்ணிக்கொள்ள வேண்டாம்.

*

இப்படி ஒரு உரையாடல் நடைபெற்றால், அரசியலில் சிறிது நேர்மையும் தெளிவும் ஏற்படக்கூடும் என்பதற்காகவே, இந்தக் கற்பனை உரையாடல் தீட்டப்பட்டது.

*

ராமசாமி படையாச்சி:- (ஆர்வத்துடன்) கேள்விப்பட்டீரா! வெளுத்துவாங்கிவிட்டேன், தி. மு. க. பயல்களை. தீப்பொறி என்று சொன்னார்கள் — கடும் கோபம் எனக்கு. ஓடஓட விரட்டி அடிப்பேன் என்று பேசினேன்.

காமராஜ்:- (கிண்டலாக) விநாயகம் அதைவிட வேகமாகப் பேசினாராமே!

ராம:- (அலட்சியமாக) ஆமாம்! எப்போதும் அந்த ஆசாமி அப்படித்தான். கண்மண் தெரிவதில்லை. ஆனால், நான் பேசியது கேட்டுத்தான், எல்லோருமே ஆச்சரியப்பட்டார்கள். ஒரு கோடி வன்னிய மக்களுக்கும் நான்தானே 'தலைவன்' என்ற நிலை இருக்கிறது.

காம:- (கேலியாக) நம்ம மாணிக்கவேலர் கூட, வன்னியர் தலைவர் என்றுதான் இப்போதும் கூறிக்கொள்கிறார்.

ராம:- (அசட்டுச் சிரிப்புடன்) வடார்க்காடு! மற்ற ஜில்லாக்களிலே அவருக்குச் செல்வாக்கு கிடையாது. எனக்குத் திருச்சி ஜில்லாவிலே ஒருவர், சேலம் ஜில்லாவில் சுப்ரமணியம் எம். எல். சி., தஞ்சாவூர் ஜில்லாவிலே சம்பந்தம் எம். எல். ஏ. இப்படி இருக்கிறார்கள்.

காம:- (வேறு ஏதோ கவனமாக) சொன்னார்கள்!

ராம:- (களிப்புடன்) திராவிட சட்டசபைக் கட்சிகூட என்னை ஆதரித்தது — பேப்பரில் படித்தீர்கள் அல்லவா!

காம:- (முகம் சுளித்தபடி) படித்தேன்! உமக்கு இன்னமும் காங்கிரஸ் எதிரிகளிடம்தான் தொடர்பு அதிகமாக இருக்கிறது. ராமசாமி! கோபம் வேண்டாம், அந்த மகாநாட்டிலே, காங்கிரஸ் தலைவர்களை மருந்துக்குக்கூடச் சேர்க்கவில்லை. பல தோழர்கள் கேட்டார்கள். சிலர் கண்டிக்கக்கூடச் செய்தார்கள். எஸ். எஸ். ராமசாமிக்கு மந்திரிவேலை கொடுத்துவிட்டால், வன்னியர் சங்கமே காங்கிரசில் சேர்ந்துவிடும் என்று கூறினீர். திண்டிவனம் மகாநாட்டிலே, ராமசாமி படையாச்சி, காங்கிரஸ் எதிர்ப்பாளர்களைக் கூட்டிவைத்துத்தான் கொலு நடத்தினார், காங்கிரஸ்காரருக்கு இடம் தரவில்லை, இதற்கு, இவரை மந்திரியாக்குவானேன், என்று கோபித்துக்கொண்டார்கள்.

ராம:- (கவலையுடன்) என்னசெய்வது! ஒரே அடியாகக் காங்கிரசில் கலந்து விடச் சொல்லமுடியவில்லை. பார்த்தாயா, பார்த்தாயா, தி. மு. க. சொன்னது சரியாகிவிட்டது என்று எங்கள் 'ஆட்கள்' பேசுவார்கள்.

காம:- (சிறிது அதிகாரத்துடன்) எல்லா வன்னியர்களையும் காங்கிரசில் சேர்த்துவிடுவது, உழைப்பாளி கட்சியைக் கலைத்துவிடுவது, என்பதுதானே ஏற்பாடு.

ராம:- (கவலையுடன்) ஆமாம்— நான் இல்லை என்று சொல்கிறேன்.

காம:- (ஆர்வத்துடன்) ஆர்க் காட்டிலே பார்த்தீரா! மாணிக்க வேலர், ஜில்லாபோர்டுத் தேர்தலில் தன் கட்சி ஈடுபடப்போவதில்லை என்று கூறிவிட்டார். இத்தனைக்கும் அவருக்கு நான் வந்த பிறகு மந்திரி வேலை கிடைக்கவில்லை—ராஜாஜியே கொடுத்து விட்டார்.

ராம:- (பெருமையாக) அவர் விஷயம் வேறு. அவருடைய கட்சிக்கு செல்வாக்கு ஏது! ஒரு நாலைந்து இடம் பிடிக்க முடிந்தது. மேலும் அவர் பேச்சை, வன்னியர் கேட்க மாட்டார்கள்.

காம:- (கேலியாக) ஆமாம் ஆமாம்! உம்ம பேச்சை, கோபாலக்கவுண்டரும், திருக்குறள் முனுசாமியும், கச்சாயரும், தி. மு. க. வில் உள்ள வன்னியர்களும், அப்படியே கேட்டு நடக்கிறார்களா! ஏனய்யா, வீண் பெருமை, அவ்வளவு சிரமப்பட்டு ஒரு மகாநாடு நடத்தினீர்—அதே ஊரிலே உம்ம போக்கைக் கண்டிக்கும் கோபாலக்கவுண்டர் இருக்கிறார், அவரைக் கண்டித்து ஒரு தீர்மானம் போடமுடியவில்லை.........

ராம:- (சிறிதுகோபமாக) போடவில்லை—போடமுடியவில்லை என்று ஏன் சொல்கிறீர்......

காம:- (கோபமாக) இந்த வக்கீல் பேச்சு என்னய்யா, பிரயோஜனம், நான் போட்ட கணக்கு தப்பு என்பது புரிகிறது.

ராம:- (கோபமாக) நீங்களும், இந்த தி. மு. க. பேச்சைக் கேட்டு நம்பி விடுகிறீர். என் செல்வாக்கை அறியாமல் பேசினால், நானே விளக்கிக் கூற வேண்டித்தான் வருகிறது. கூறினால் தற்பெருமை என்று எண்ணிக்கொள்வீர். என்னைக்கண்டித்து பெரியார் ராமசாமி ஒரு அறிக்கை கூடவிடவில்லை, தெரியுமோ!

காம:- (சிரித்தபடி) அடேயப்பா! இதென்னய்யா பிரமாதம். என்னை ஆதரித்தே அறிக்கை வெளியிட்டிருக்கிறார் தெரியுமா.

ராம:- (வீரமாக) பார்த்தேன். ஆனால் என்னை எதிர்த்து, தி. க. தி. மு. க., கம்யூனிஸ்டு, எதுவும் ஒன்றும் செய்யமுடியாது. கருப்புக் கொடி காட்டினார்களா! முடிந்ததா! முடியுமா?

காம:- (கோபமாக) ஆசியாவின் ஜோதி ஜவஹர்லால் நேரு, அவருக்கே கருப்புக்கொடி காட்டினவர்கள் தானய்யா, தி. மு. க. காட்டினால் என்னசெய்துவிடுவீர். குத்துவேன், வெட்டுவேன், என்று பேசினால் அது அரசியல் பேச்சா! தி. மு. க. தலைவர்களெல்லாம் ஜெயிலிலே அடைபட்டு இருந்தார்கள், வெளியே இருந்தவர்கள், நேருவுக்குச் சென்னையிலேயும் மதுரையிலும் கருப்புக்கொடி காட்டினார்கள். உமக்குக் கடலூரிலும், தென் ஆர்க்காடு ஜில்லாவிலும் இருக்கிற செல்வாக்கு, நேருவுக்குச் சென்னையிலேகிடையாதா, என்னமோ பேசுகிறீர், கருப்புக்கொடி காட்ட முடியாது என்று!

ராம:- (துக்கத்துடன்) நீங்களே இப்படிப் பேசினால்......

காம:- (கிண்டலாக) நான் பேசவில்லை—நீர், என்னைப் பேச வைக்கிறீர். மாணிக்கவேலருக்கு வாலாஜாவில்காட்டினார்கள், உமக்குக் கடலூரில் உள்ள செல்வாக்கு மாணிக்கவேலருக்கு வாலாஜாவில் இல்லையா ......என்னமோ, பேசுகிறீர்,

ராம:- (விகடமாக) அதற்கல்ல நான் சொல்வது......பொதுவாக என்னை விரோதித்துக்கொண்டு, தென் ஆர்க்காடு ஜில்லாவிலே, வேலை செய்யமுடியாது......

காம:- (கெம்பீரமாக) நானே உம்மை எதிர்த்து வேலை செய்து இருக்கிறேன்–தலை இருக்கிறதே...!

ராம:- (புன்சிரிப்புடன்) நாம்பேச ஆரம்பித்த வேலையே சரி இல்லை போலிருக்கு......

காம:- (வெறுப்புடன்) உம்முடைய வேலைக்குஎன்ன குறை! அது சரியாகத்தான் இருக்கு என்வேலை தான் சரியாக இல்லை. நான் இருக்கிற சூழ்நிலையை எண்ணி, எதிர்ப்புகள் கூடாது, சந்து கிடைத்தால் உள்ளே நுழைய ராஜாஜி சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார், காங்கிரசுக்குள்ளேயே ஒரு 'கோஷ்டி' எப்போது காலை வாரிவிடலாம் என்று காத்துக்கொண்டிருக்கு. அதனாலே தி. க; தி. மு. க. இவர்களைத் தட்டிக் கொடுத்துக் கொண்டு போவதுதான்நல்லது. நமக்குஎல்லாருடைய ஒத்துழைப்பும் இருக்க வேணும்னு நினைச்சுக் காரியம் செய்கிறேன். உமக்கு மந்திரி வேலை கொடுத்ததேகூட அந்த நோக்கத்துக்காகத்தான். நீர் செய்கிற காரியம் என் நோக்கத்தையே கெடுத்து விடுமே......

ராம:- (சோகமாக) நான் என்ன கெடுதி செய்தேன்......

காம:- (வெறுப்புடன்) தேடிப் பகைவளர்த்துக் கொள்கிறீர்.—தி. மு. க.-வைக் கண்டபடி ஏசினா, எதிர்ப்புக் கிளம்பாமலா இருக்கும்! உனக்கு இருக்கிற அபாரமான செல்வாக்காலே, அவர்களை ஓட ஓடவே அடிச்சி விரட்டிவிடறதாகவே வைத்துக்கொள்ளு பிறகு அந்த எதிர்ப்பு உம்மோடு முடியுமா — என்னையுந்தானே வந்து சேரும். புதுசா பலம் சேரும்னு உமக்கு மந்திரிவேலைகொடுத்தா, நீர், சும்மா இருக்கிற தி. மு. க.வைக் குத்திவிட்டு, வேடிக்கை பார்க்கிறீர்!

ராம:- (சலிப்புடன்) என்னைக் கண்டித்தா நான் எப்படிச் சும்மா இருக்கமுடியும்?

காம:- (கோபமாக) என்னய்யா கண்டித்துவிட்டாங்க. மாணிக்கவேல நாயக்கரு, மந்திரியானபோது, நீர் அவரை என்ன கண்டித்தீரோ, அதையே இப்ப உமக்குத் திருப்பறாங்க — ரோஷமும் கோபமும் பொங்குதே! மாணிக்கவேலர் விஷயத்திலே மட்டும், குலம் மறைந்து போவுதா — அவரும் வன்னியர் தானே...

ராம:- (சோகமாக) பழைய விஷயத்தைக் கிளறினா, பேச்சு ஒரு முடிவுக்கும் வராது.

காம:- (சலிப்புடன்) பழைய விஷயத்தை நீர் விடவில்லையே. இப்பவும் திண்டிவனம் மகாநாட்டிலே கூட வன்னியர்களுக்காகத்தான் நான் மந்திரிசபையிலே சேர்ந்தேன் என்று பேசினீர். காங்கிரஸ் புனிதமான ஸ்தாபனம், நான் அதிலே சேர்ந்துவிட்டேன், வீணாக ஜாதி, குலம், இதை எல்லாம் பேசிக்கொண்டு தேசத்தை நாசமாக்கக் கூடாது, எல்லோரும் காங்கிரசிலே சேரவேணும், என்று பேச உமக்கு மனம் வரவில்லையே. பழைய பேச்சுத்தானே நடந்தது.

ராம:- (வேண்டும் குரலில்) வன்னியர் மகாநாட்டிலே, அப்படித்தானே பேசவேண்டியிருக்கு. மற்ற இடத்திலே, காங்கிரசை ஆதரித்துத்தான் பேசி இருக்கிறேன்.

காம:- (கோபமாக) உம்மோட தயவு தேவை இல்லையே! உம்ம ஜாதியாரிடம்தானேய்யா நீர், காங்கிரசுக்கு ஆதரவு தேடிப்பேசனும்.

ராம:- (பணிவாக) போகப்போக ………

காம:- (வெறுப்புடன்) போகப்போக, இன்னும் என்னென்ன தொல்லை பிறக்குமோ உம்மாலே என்றுதான், எனக்குக் கவலையா இருக்கு. மாணிக்கவேல் நாயக்கர் போல் பக்குவமாக நடந்துகொள்ளத் தெரியவில்லையே, உமக்கு, அவருக்கும்தானே, வன்னியர் சங்கம் இருக்கு.

ராம:- (சிறிது கோபமாக) அடிக்கடி, மாணிக்கவேலர் பேச்சை எடுத்துக்காட்டறது என்னைக் குத்திக் கிண்டல் செய்கிறமாதிரியா இருக்கு. எனக்கு ஒன்றும் இந்தப்பதவி பெரிதல்ல.

காம:- (கோபமடைந்து) ஆமாம் ஆமாம்!…மகாநாட்டிலேகூடத்தான் பேசி இருக்கிறீர். காமராஜர், தேடித்தேடிப் பதவி கொடுத்தாரு. எனக்கு ஒன்றும் பதவிபெரிதல்ல! கிடைக்கிற சம்பளம் என்செலவுக்குப் போதுமா, மாசம் ஆயிரம் இரண்டாயிரம் என் கைப்பணம் செலவாகுது, என்றெல்லாம். இது, எங்களை எல்லாம் சேர்த்து அவமானப்படுத்துகிற பேச்சு அல்லவா ………

ராம:- (திடுக்கிட்டு) ஐயையோ! உங்களை அவமானம செய்தேனு… நானு……?

காம:- (கோபம் குறையாமல்) பதவி எனக்குப் பெரிதல்ல, பணம் முக்கியமல்லன்னு நீர் பேசினு. எங்களுக்கெல்லாம் பதவிதான் முக்யம், பணம்தான் பிரதானம், என்றுதானே, மறைமுகமாகப் பொருள்படும்.

ராம:- (சமாதானம் கூறும் பாவனையில்) தப்பா அர்த்தம் செய்துகொண்டு பேசினு, நல்லதா……

காம:- (கோபம் குறையாமல்) பகிரங்கமாக, மகாநாட்டிலே, நான் தேடித்தேடிவந்து உமக்குப் பதவி கொடுத்தேன் என்று பேசினீர். தனியாக உம்மகுலத்தாரைப் பார்க்கிறபோது, காலிலே விழுந்தாரு, காப்பாத்தவேணுமென்று கெஞ்சினாரு, என்றெலலாம் கூடத்தான் கதை அளக்கவேண்டி இருக்கும்.

ராம:- (சமாதானமாக) அப்படி எல்லாம் பேசுவேனு! மந்திரிவேலைக்காக, கட்சி மாறிவிட்டேன் என்று கண்டிக்கிறவங்க வாயை அடக்க, அதுபோலப் பேசினேன்……

காம:- (வெறுப்புடன்) அப்படி யாரு, என் கட்சிக்காரர், என்னைக் கேட்கமாட்டார்களா! நமக்குத்தான் மெஜாரிடி இருக்கே, ஏன் ராமசாமியை மந்திரியாக்கிவிட்டு இப்ப, அவர், உங்களையே இடித்துப்பேசறதுக்கு இடம் கொடுத்தீங்க, என்றெல்லாம், என்னைக் கண்டிக்கமாட்டார்களா! உமக்கு மந்திரி வேலை கொடுத்து, ஜாதிச் சங்கத்தைக் கலைத்து, எல்லோரையும் காங்கிரசாக்கி விட்டேன் என்று நான் எடுத்துக் காட்டினால் தானே, எனக்குக் கௌரவம். இப்ப, உம்மபேச்சு, என் மானத்தை அல்லவா, போக்குது,

ராம:- (தெளிவுதர) ஒரு வார்த்தை கூட நான் கண்டிச்சுப் பேசவில்லையே……

காம:- (வெறுப்புடன்) நடக்கிறது காங்கிரஸ்மந்திரிசபை காங்கிரசுக்குசரியானமெஜாரடியும் இருக்கு. நீரும், உமமுடைய சகாக்களும் சட்டசபையிலே காங்கிரஸ் பக்கம் உட்கார்ந்தாச்சி. இந்த நிலையிலே நீர்.: ஜாதி மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறதும், என் ஜாதிபோட நன்மைக்காகத்தான் நான் மந்திரியானேன் என்று மார்தட்டிப் பேசறதும், அதுவும் நாணுகப்போகவில்லை, காமராஜரே கூப்பிட்டுக் கொடுத்தார் என்று பெருமையாகப் பேசுவதும், ஒழுங்கா. இதை ராஜாஜி கோஷ்டியார் நேருஜீயிடம்சொன்னால் அவர், என்னை என்ன எண்ணுவார். மதிப்புக் கொடுப்பாரா……

ராம:- (சோகமாக) நான் அவ்வளவு தூரம் யோசனை செய்யவில்லை தி. மு. க. பயல்கள் மீது கோபம்…

காம:- (கேலியாக) நீர், ஏன் யோசிக்கப் போகிறீர்! உமக்கு மந்திரி வேலையும் வேணும், ஜாதி சங்கமும் வேணும்!

ராம:- (நாணம் கவிந்தபடி) ஜாதி சங்கத்தையும் செல்வாக்கையும் பார்த்துத்தானே, என்னை மந்திரி சபையிலே சேர்த்துக் கொண்டீர்கள்.

காம:- (அசடு சொட்ட) ஆமாம் …அதனுடைய இலட்சணம் இப்பதான்தெரியுது. அமைதியாக இருக்கிற அரசியலை, நீர், தி. மு. க. மீது வசைபாடிக் கெடுத்து வருவதும் தெரியுது……

ராம:- (புன்சிரிப்பாக) தி. மு. க. என்ன செய்துவிடமுடியும் — ஏன் அதுகளைப் பெரிதாக எண்ணிக்கொண்டு, பேசறீங்க……

காம:- (மேலும் கோபமாக) போதும், சும்மா இருமய்யா… தி. மு. க. என்ன செய்திட முடியும்னு, இப்பகேட்கிறீரா… இவ்வளவு நாளா அவர்களோடு குலவின போது…

ராம:- (அலட்சியமாக) அதுகளாக வந்து என்னோடு குலவின…

காம:- (வெறுப்புடன்) ஆமாம் ஆமாம்! காங்கிரசுக்கும் நாளைக்கு அதையே தான் சொல்லப்போகிறீர் காங்கிரசாக என்னிடம் சரணாகதி அடைந்ததுஎன்று. நாளைக்குஎனன! இப்போதே அதுதான் பேசுகிறீர். மகாநாட்டிலே அதே தானே பேசினீர், நம்ம மந்திரிசபையை ஆதரிக்க வேணும்னு, திராவிடர்கழக மாநாட்

நமது அலுவலகத்தில் அச்சுக் கோப்பாளராக பணியாற்றி மறைந்த தோழர் எஸ். குப்புசாமி.

டிலே தீர்மானம் போட்டார்கள். நீர் மந்திரி, உம்ம மகாநாட்டிலே, மந்திரிசபையை ஆதரிக்க வேணும் என்று ஒரு தீர்மானம் போடக்கூட இஷ்டமில்லை, உமக்கு.

ராம:- (சமாதானமாக) மறந்து போயிட்டுது.

காம:- (வெறுப்பாக) அவ்வளவு அற்ப விஷயம் அது உமக்கு அல்லவா! தி. மு. க. மீது தாக்குதல் நடத்தத் தானே மகாநாடு. கொள்கை விளக்கமா, ஒரு இழவு உண்டா அதிலே. காங்கிரஸ் மந்திரி சபையிலே இருந்துகொண்டே ஜாதிக்கொள்கையைப் பேச உமக்கு மனம் இடம் தருது. எனக்கும் ஒரு ஜாதி இருக்கய்யா, எங்கே விரலைமடக்கு, ஒரு நாள் நான் கூறி இருக்கிறேனா, நான் மந்திரியானது, நாடார் சமூக முன்னேற்றத்துக்கு என்று.

ராம:- (கோபம் கொண்டு) உம்மை யார் வேண்டாமென்றது.

காம:- (கோபம் குறையாமல்) என் கொள்கை அப்படி! என்குலம், என் ஜாதி, அதிலே எனக்குச் செல்வாக்கு என்று பேசுவது பெரிய கீர்த்தி என்று நான் எப்போதுமே எண்ணினதகிடையாது. இப்போது பார்க்கிறீரே, நான், எந்தத் தொகுதிக்கு தேர்தலுக்கு நிற்கிறேன். குடியாத்தம்—செங்குந்த முதலிமார்கள் தான் அதிகம்—நாடார் தொகுதி அல்ல... அங்கேதான் நான் நிற்கிறேன். ஜெயிக்கப்போகிறேன்—செல்வாக்குன்னு அதற்குத் தானய்யா செல்வாக்குன்னு பேரு.

ராம:- (வெறுப்படைந்து) பேச்சு வளருவது சரியில்லை. 'நான்......

காம:- (கேலியாக) மந்திரி வேலையை ராஜிநாமாச் செய்துவிடுகிறேன் என்று சொல்கிறீரா...

ராம:- (திகைத்து) பிறகுவந்து பேசுகிறேன்.

காம:- (கேலியாக) பயந்தே போனேன், எங்கே ராஜிநாமாச் செய்து விடுகிறீரோ என்று. நாம் பேசுவது கிடக்கட்டும். வீணாக தி. மு. க-மீது வசைபாடி எனக்குத் தொல்லையைக் கொண்டுவந்து வைத்துவிடாதீரய்யா. உமக்குக் கோடிபுண்யம் உண்டு.

[கனம், ராமசாமி இலேசாகப் புன்னகை புரிந்தபடிவிடை பெற்றுக் கொள்கிறார்:] ❀

வீரர் கோட்டம் வேலூர்

"ஆரிய மாயைக்குத் தடையாம்—அறிவுக்கு இருட்டடிப்பாம். ஆணவம் வளர்வதாம். ஆகுமா இந்த அக்ரமம்?" என ஏங்கியிருந்தோர் உள்ளம் குளிர, கொள்கைக்காக, குற்றுயிராக்கப்பட்டாலும், போராடியே தீருவோம் எனத் தடையைத் தவிடு பொடியாக்கிய குணக்குன்றுகளின் கூடாரம் வட ஆர்க்காடு மாவட்டம்.

எத்தர்கள் ஏமாற்றி. ஏற்றம் பெற்றதை, எடுத்துக்காட்டி விடுகிறதே என்ற ஏக்கம் காரணமாக, "இரணியன்" நாடகம் நடத்த அனுமதியில்லையென அரசாங்கம் அறிவித்தது. ஆமைகளல்ல நாம் அடங்கிக்கிடக்க. உரிமைக்காக உயிரிழக்கும் துணிவு எமக்குண்டு என உலகுக்கு உணர்த்தி, நாடகத்தை நடத்திய நல்லவர்களின் உறைவிடம் வட ஆர்க்காடு மாவட்டம்.

"கல்லைப் போராட்டத்"திற்கு எண்ணற்ற இளைஞர்களை அனுப்பியதும் அந்த மாவட்டம் தான்.

தி. மு. கவின் தீவிரப் போராட்டங்கள் அத்தனைக்கும், முன்னணி தேடிப் புறப்பட்ட தீரர்களின் கோட்டம் வடஆர்க்காடு மாவட்டம்.

அத்தகைய மாவட்டத்திலே மாநாடுகள் மாண்புற நடைபெற்றது ஆச்சர்யப்படத்தக்கதல்ல என்றாலும் அங்கேயும் அவர்களின் வீரம் வெளிப்பட ஒரு சந்தர்ப்பம் தரப்பட்டது. நாள்குறித்து இடம் அறிவித்த பின்னர் கூட அதற்குமொரு இடையூறு...... இடம் தர மறுத்துவிட்டனர். என்றாலும் வேலூரிலேயே மாநாடு நடைபெறத் தான் செய்தது மாற்றார் மனதும் குளிரும்வகையிலே. ஏழே நாட்கள் தான். எழுதவொண்ணா எழில்ஓவியமாகக் காட்சி தரும் வகையில் அமைத்தனர், மாநாட்டை, அந்த மாவீரர்கள். வெற்றிப்பாதையில் விரைந்து செல்லும் தி. மு. கவின், மற்றுமோர் சாதனை அந்த மாநாடுகள் என்ற அளவுக்கு அழகுற அமைந்திருந்தது. ஆர்வம்அலையென ஒலிக்க, அந்தக் காளைகள் அங்குமிங்கும் ஓடியாடி மாநாட்டை இனிது முடித்தனர். அவர்களையெல்லாம் பாராட்டுகிறோம்.

26-ந்தேதி தோழர் நெடுஞ்செழியன் துவக்க தோழர் ஈழத்தடிகள் தலைமை தாங்க சமூக சீர்திருத்த மாநாடும், 27-ம் தேதி தோழர் நாஞ்சில் மனோகரன் ஆரம்பித்துவைக்க, தோழர் மதியழகன் தலைமை வகிக்க அரசியல் மாநாடும் நடைபெற்றன. இரண்டு நாட்களிலும் பொதுச் செயலாளரின் உரையும், அம்மையப்பன், சந்திரமோகன் நாடகங்களும் மாநாட்டை அணிசெய்தன.

இரண்டு நாட்களிலும் நண்பர் அனீபா செவிக்குணவு வழங்கினர். இயக்க முன்னணியினர் அனைவரும் கலந்து கொண்டு நல்லுரை நல்கினர்.

நாட்டின் நலிவு போக்கும் நல்ல பல தீர்மானங்கள், மக்கள் கடலிடை மகத்தான ஆதரவு பெற்று நிறைவேறின.

கண்ணுக்கும், கருத்துக்கும், களிப்பூட்டும் காட்சியாக மாநாட்டினை நடத்திய தோழர்கள் எம். பி. சாரதி, எ. எல். சி. கிருட்டினசாமி, போளூர் சுப்ரமணியம், வி. ஆர். ஆதிமூலம், வி. எஸ். அரங்கநாதன், அ. கருத்தோவியன், எஸ். குப்புசாமி, சிவானந்தம், இராதாகிருட்டினன், ஆகியவர்களையும், அவர்களோடு உதவியாக இருந்த மற்ற இயக்க நண்பர்களையும், மாநாடு வெற்றிகரமாக நடைபெற பெரிய அளவில் ஒத்துழைத்த பொதுமக்களையும் மீண்டும் ஒரு முறை பாராட்டுகிறோம். வளர்க உரிமைத்தாகம். வாழ்க வீரர்கள்.

திருமணம்

காஞ்சியில் 4—7—54-ல் இராசமாணிக்கம்—வள்ளிநாயகி வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் டி. சி. கருப்பண்ணன் எம். ஏ. அவர்கள் தலைமையில் சி. என். அண்ணாதுரை அவர்கள் சொற்பொழிவுடன் நடைபெறும்.

நாம் கடவுளை அறிந்த விதம்!

கந்தழி கல்லாக மாறிய விந்தை!!

26—6—54-ல் வேலூரில் நடைபெற்ற, சமூக சீர்திருத்த மாநாட்டில் தலைமை வகித்த ஈழத்தடிகளின் சொற்பொழிவின் பிற்பகுதி இங்கு தரப்படுகிறது:-

ஒருவன் மாளிகையில் வாழ்வது பூர்வ புண்ணியவசம் என்றும், இன்னொருவன் குடிசையில் வாழ்வது அவன் செய்த பாபத்தால் ஏற்பட்டதென்றும் மதம் முடிவு கட்டி வைத்திருக்கிறது. இந்த முடிவை மாற்றவோ மறுக்கவோ உன்னால் முடியாது, அந்த உரிமை உனக்குக் கிடையாது—அது ஆண்டவனுடையது என்று கூறி அறிவுக்கு—முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போட்டிருக்கிறது மதம். எனவேதான் நாம், மதத்தையும் கடவுளையும் பற்றிப் பேசவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். கடவுளும் மதமும் நம்முடைய வாழ்வில் தலையிடவில்லையென்றால், கடவுளையும் மதத்தையும் பற்றிப் பேசவேண்டிய நேரத்தை, வேறு நல்ல துறைகளுக்கு நாம் பயன்படுத்தியிருப்போம். ஆனால், மனிதனின் தன்னம்பிக்கையை இழக்கச் செய்த இந்தக் கடவுளும் மதமும் நாட்டில் இல்லாதொழியும்வரை நாம் இதைப்பற்றிப் பேசித்தான் ஆகவேண்டியவர்களாக இருக்கிறோம்.

தமிழ்நாட்டைப்பொறுத்தவரை சேர சோழ பாண்டியர்கள் என்ற மூப்பெரும் அரசர்கள் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்தார்கள். அவர்களைப்போல் மதத்தைப் பாதுகாத்தவர்கள் வேறு யாரும் கிடையாது. கடவுளின் அருளைப் பெற்றுவிட்டால், கணக்கற்ற பெரும் பேறுகளைப் பெற்று வாழலாம் என்ற மதக் கோட்பாட்டினை நம்பிய காரணத்தால், அவர்கள், கண்ணை இமைகாப்பதுபோல் கடவுளைக் காத்து வந்தார்கள். அதாவது, கவனிப்பாரற்று, காட்டிலும் மேட்டிலும், குழியிலும் குட்டையிலும், புதரிலும் புற்றிலும கிடந்த கற்சிலைகளுக்கு, கனத்த பொருட்செலவில் ஆலயங்களை எழுப்பி அங்கே ஆண்டவனை எழுந்தருளப் பண்ணும் கும்பாபிஷேகத்தைச் செய்து, ஆண்டவனை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்திவைத்தார்கள். உதாரணத்துக்கு ஒன்றை மட்டும் கூறுகிறேன். இன்று மதுரையில் காணப்படும் மீனாட்சியம்மன் கோயில், குலசேகர பாண்டியன் என்ற மன்னன் காலத்தில், இப்போதுள்ள நிலையில் அது இருக்கவில்லை. குலசேகர பாண்டியனுக்கு இராசதானியாக இருந்த மணவூரிலே தனஞ்செயன் என்னும் ஒரு வியாபாரி இருந்தான். வியாபார நிமித்தமாக வெளியூர் சென்றிருந்த தனஞ்செயன், ஊருக்குத் திரும்பி வரும்பொழுது இருட்டிவிட்டபடியால், ஒரு காட்டுக்குள் தங்கவேண்டியதாயிற்று. தங்கியிருந்த சமயத்தில் அங்கொரு சிவலிங்கம் இருப்பதைக் கண்டான். பொழுதுவிடிந்ததும் மணவூருக்குச் சென்று, அரசனிடம் இதைத் தெரிவித்தான். அன்றிரவு, காட்டில் லிங்க வடிவில் இருந்ததாகச் சொல்லப்படும் சொக்கநாதக் கடவுள், பாண்டியனுடைய கனவில் தோன்றி "நானிருக்கும் அந்தக் காட்டை வேரோடு களைந்து, அதை ஒரு நகரமாக்கி, எனக்கு ஒரு ஆலயம் கட்டித் தரக் கடவது" என்று கட்டளையிட்டு மறைந்துவிட்டாராம். ஆண்டவனின் கட்டளையைச் சிரமேற்கொண்ட குலசேகர பாண்டியன், சொக்கநாதருக்கு ஒரு ஆலயமும், மீனாட்சிக்கு ஒரு தனி ஆலயமும் எழுப்பி, அந்த இரு ஆலயங்களையும் சுற்றி ஒரு பெருநகரத்தையும் உண்டாக்கி, அந்தக் கோயிலுக்கு பூசை செய்வதற்காக காசியிலிருந்து சில பிராமணர்களையும் வருவித்தானாம். அதன்பின்னர் தான் அந்த இடம் மதுரை என்ற பெயர்பெற்றதாம். இப்படிஒருகதை மதுரையைப்பற்றியும் அங்குள்ள கோயிலைப்பற்றியும் கூறப்படுகிறது. இதுபோலவேதான் தமிழ் நாட்டில் கட்டப்பட்டுள்ள ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு கதை கூறப்படுகிறது.

அப்படிப்பட்ட அரும்பெரும் காரியத்தை அதிக பொருட்செலவில் செய்து வைத்த அந்த சேர, சோழ, பாண்டியர்கள் இப்பொழுது எங்கே? அந்த அரச பரம்பரைகள் அடியோடு அழியக் காரணம் என்ன? 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்று ஒரு பழமொழியும் மத உலகில் உலவுகிறது. ஆனால், இந்தப் பழமொழிக்கு முற்றிலும் மாறாக முடியுடைவேந்தர்களாக வாழ்ந்த அந்த மூப்பெரும் மன்னர்களும், அந்த ஆண்டவனால் கைவிடப்பட்டு விட்டனர்—அழித்தொழிக்கப்பட்டனர்.

காஞ்சியில்!

தியாகராயர் மன்ற
இரண்டாம் ஆண்டு விழா

4—7—54 ஞாயிறு மாலை
கண்ணன் டாகீஸ் மைதானத்தில்

தோழர் ஆர். கே. மூர்த்தி
தலைமையில்

தோழர்கள்:

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
கோகுலகிருஷ்ணன் பி. ஏ. பி. எல்.

ஆகியோர்கள் சொற்பொழிவுகளுடன் நடைபெறும்.

ஏன்? தனக்குக் கோயில்கட்டி, தன்னைப் பாதுகாத்துத் தரணியாண்ட முடியுடை வேந்தர்களை—அவர்களின் பேரைக் கூறிக்கொண்டிருக்கக்கூட ஒரு ஆளை அந்தப்பரம்பரையில் விட்டுவைக்காத அந்தக் கடவுளை, நாமும் வணங்கவேண்டும் என்று சொல்லிக் கொள்வதற்கு இன்னும் சிலர் இந்த நாட்டில் இருக்கிறார்களென்றால், அவர்களைப்பற்றியும் அந்தக் கடவுள்களைப் பற்றியும் உள்ள பித்தலாட்டப் புனைசுருட்டுகளை நாம் பேசித்தானே ஆகவேண்டும். அதற்காகத்தானே இப்படிப்பட்ட சீர்திருத்த மாநாடுகளைக் கூட்டவேண்டியவர்களாக இருக்கிறோம்! இல்லையேல் மாற்றுக் கட்சிக்காரர்கள் கூறுவதுபோல, அரசியல் மாநாட்டினை நடத்துவதோடுமட்டும்நின்றுவிடுவோம். அரசியலிலும் வேண்டிய தேவைகள் நாட்டிற்குக் கிடைத்துவிட்டால், அரசியல் மாநாடு என்ற ஒன்றைக் கூட கூட்டும் அவசியத்தில் நாம் இருக்கமாட்டோம். காங்கிரஸ்காரர்களைப்போல, காங்கிரஸ் மகாசபையின் வேலை முடிந்தும் கூட அந்த மகாசபையைக் கலைக்காமலிருக்கிறார்களே, அப்படி நாம் இருக்கமாட்டோம். குறிப்பிட்ட ஒரு நோக்கத்துக்காகத் துவக்கப்பட்ட அந்த வேலை முடிந்ததும், அதைப்பற்றியே சதாசர்வ காலம் பேசிக்கொண்டு காலத்தைக் கழிக்காமல், வேறு பயன்தரத்தக்க ஒரு நல்ல வேலையை ஆரம்பித்து, அதிலும் வெற்றிகாண முயல்வதே அறிவுடைமையாகும். வேண்டுமானால் குறிப்பிட்ட ஒரு வேலையை நாம் செய்தோம் அதற்காக அரும்பாடுபட்டோம்; அதற்கு இன்னின்னாரின் உதவி கிடைத்தது; எல்லாம் கூடி நமக்கு வெற்றியை விரைவில் தேடித்தந்தது என்பதை மட்டும் நாம் மறவாமல் இருக்கலாம்—மறக்கக்கூடாது. ஆனால்தொடங்கியவேலை முடியவில்லையென்றால், அது முடியும்வரை பாடுபட்டேயாகவேண்டும். சமூகத்தைத்திருத்தியமைக்கப் பாடுபடும்நாமும், தொடங்கப்பட்ட வேலை முடியாத நிலையிலேயே இன்னும் இருந்து கொண்டிருக்கிறோம்.

சமூகம் எதனால் ஏன் சீர்கெட்டுக் கிடக்கிறது என்பதை விளக்க முற்படும்பொழுது, அந்தச் சீர்கேட்டிற்குக் காரணமாய் எவையெவை இருக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்த்து அவைகளை மக்களின் சிந்தனைக்கு வைக்கிறோம். நாம் எந்தக் கருத்தினையும், இதனைத்தான் நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கட்டாயப்படுத்தும் கருத்துடையவர்களல்ல. எவையெவை மக்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றனவோ, அவற்றைக் களைந்தாகவேண்டுமென்ற நமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறோமே ஒழிய, கல்லைக் காட்டி இதுதான் கடவுள் என்று கூறும் மதவாதியைப்போல் மதியிழந்து, நாம் கூறும் எதனையும் மக்கள் நம்பியாகவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துவதில்லை. அது ஒரு பகுத்தறிவுவாதிக்கு ஏற்ற வேலையுமல்ல. அப்படிச்செய்வது பகுத்தறிவு என்ற சொல்லையே கேலிசெய்வது போலாகமுடியும். ஒரு பகுத்தறிவுவாதி, யார் எதனைஎப்படிச்சொன்னபோதிலும், அதனை அப்படியே ஒப்புக்கொள்வதில்லை — ஒப்புக்கொள்ளக்கூடாது. எது யாரால் கூறப்பட்டாலும், அதில் உண்மை இருக்கிறதா? உலக இயல்புக்குப் பொருந்திவருகிறதா? அதனால், மக்கள் முன்னேற்றத்திற்கு வழி ஏற்படுகிறதா? என்ற இவைகளைப் பகுத்து அறிந்து தெளிவு பெற்ற பின்னரே அந்த உண்மையை மற்றவர்களுக்கும் கூறி அதனை அவர்களும் ஒப்புக்கொள்கிறார்களா என்றும் பார்க்கவேண்டும். அந்த அளவுக்குப் பொறுமை இருந்தால்தான், ஒரு பகுத்தறிவுவாதி தன் இலட்சியத்தில் வெற்றி காண முடியும்.

முதன்முதலில், கடவுளைப்பற்றி நமக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது, இன்று நாம் காணும் கடவுள், நம்முடைய கருத்திலும் பதியவில்லை; கண்ணிலும் புலப்படவில்லை. அது வேறுவிதமாக இருந்தது. பழம்பெருந் தமிழ்நூலான தொல்காப்பியத்தில் கடவுளை நமக்கு அறிமுகப்படுத்தும் ஒரு சொல் இருப்பதாகப் புலவர் பெருமக்கள் கூறினர்—அதன் பெயர் 'கந்தழி' என்பது. இந்தக் கந்தழி என்ற சொல்லின் பொருள், ஒரு பற்றுக்கோடுமின்றி அருவாகி, தானே நிற்கும் தத்துவம், கடந்த பொருள் என்பதாகும். இந்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள ஒரு கடவுள் இருப்பதால், யாருக்கும் எந்தவிதமான தொல்லையும் ஏற்படாதென்றே எவரும் கருதுவர். இப்பொருளை அடிப்படையாகக்கொண்ட ஒரு கடவுளை, அக்காலத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தாலும் அதில் தவறொன்றும் இருக்கமுடியாது. எதனிடத்தும் பற்றில்லாத ஒன்று—வடிவங்கள் எதுவுமில்லாத ஒன்று—பிறருடைய உதவியையோ துணையையோ நாடாத ஒன்று—தத்துவம் அனைத்தையும் கடந்த ஒன்று—கடவுளாகவோ அல்லது வேறு எதுவாகவேனுமோ இருக்கட்டும். அதனால் நமக்கேற்படும் கெடுதலோ நன்மையோ ஒன்றுமே இருக்காதென்றே அக்காலத்தவர் கருதியிருப்பர். அதனாலேயே அந்தச் சொல்லும், பற்ற நூல்களைப்போல் கடவுள் வாழ்த்தோடு தொடங்கப்படாத தொல்காப்பியத்தில் இடம் பெறமுடிந்தது. ஆனால் கந்தழி என்னும் இந்தச் சொல்லே, இன்றைய திராவிட மக்களின் வாழ்க்கையைச் சுட்டெரிக்கும் வெந்தழலாக மாறுமென்று அச்சொல்லை உண்டாக்கிய தொல்காப்பியனார்கூட கனவிலும் நினைத்திருக்கமாட்டார். அந்தளவுக்கு இந்தக் கந்தழி நம்மையெல்லாம் வாட்டி வதைக்க ஆரம்பித்துவிட்டது. முதலில் யாதொன்றிலும் பற்றுதலில்லாதிருந்த இந்தக் கந்தழி, நாளாவட்டத்தில், இறைவனாகி, அதன் பின்னர் அழகு என்றும் சிவம் என்றுமாகி, இப்பொழுது கல்லாய் செம்பாய் கட்டையாய் மாறி, நம்மையெல்லாம் எந்தளவுக் கீழ்நிலைக்குக் கொண்டுபோய் விட்டிருக்கிறது.

விற்பனையாகிறது!
ஈ. வி. கே. சம்பத் தீட்டிய
"முடி சாய்ந்தது"
விலை ரூ 1—4—0
விற்பனைக் கழிவு 25%
விபரங்கட்கு:
நீலா நிலையம்,
11. A. சேரிரோட், சேலம்.

என்பதை எண்ணும்போதுதான், இனியும் இப்படிப்பட்ட ஒரு கடவுள் நமக்குத் தேவையா என்று சிந்திக்கத் தோன்றுகிறது. இந்தக் கந்தழி என்ற ஒரு சொல்லை உண்டாக்கிய தொல்காப்பியர் இன்றிருந்தால் கட்டாயம் கண்ணீர் வடித்திருப்பார்.

அன்றைய கடவுள் நம்மிடமிருந்து எதனையும் எதிர்பார்க்கவில்லை. அது எந்தப் பொருளிடத்தும் பற்றுதலில்லாமலிருந்தது மட்டுமல்ல, யாதொரு வடிவத்தையும் கொண்டதாக இருந்ததில்லை என்று மத நூலாரே கூறுகின்றனர். ஆனால், இன்றைய கடவுளுக்கோ, அளவுக்கு மீறிய பற்றுதலும் பாசமும் ஏற்பட்டிருக்கிறது. தன்னால் படைக்கப்பட்ட உயிர்கள், குடிக்க கஞ்சிக்கும் உடுக்கத் துணிக்கும், இருக்கக் குடிசைக்கும் வழியில்லாமல் வாடியிருந்தாலும், தனக்கு இலட்சக்கணக்கான பொருட்செலவில் கட்டப்படும் ஆலயமும், பலகோடி பெறுமான ஆபரணங்களும் ஆறுகால உணவும் தேவையென்று கேட்கிறது—நிர்ப்பந்திக்கிறது-நிர்ப்பந்தித்துப்பெற்று விடுகிறதென்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அதே போது, அதே கடவுளின் படைப்புகளில் பலர் பஞ்சையாய் பராரியாய் பதைபதைத்துத் திரிவதையும் கண்கூடாகக் காண்கிறோம். காணும்போதுதான், இப்படிப்பட்ட ஒரு கடவுள் இனியும் நாட்டில் இருக்கத்தான் வேண்டுமா என்று எண்ணத் தோன்றுகிறது. எனவேதான், இப்படிப்பட்ட சமூக சீர்திருத்த மாநாடுகளிலே, அன்றைய கடவுளையும் இன்றையகடவுளையும் ஒப்பிட்டுப் பார்த்து, கடவுள்பற்றிய நம்முடைய கருத்தைமற்றவர்களுக்கும் தெரிவிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இப்படிப்பட்ட சந்தேக விளக்கங்களை நாட்டு மக்களின்முன் கொண்டுவந்து வைக்கும் எங்களை நாத்திகர்கள் என்று நாணயமற்ற சிலர் சொல்கிறார்கள் என்றபோதிலும், நாம் நம்முடைய வேலையைப் பாதியில் நிறுத்தாமல் தொடர்ந்து செய்து கொண்டே செல்கிறோம். வெற்றி நமக்குத்தான், அவர்களுக்கில்லை எனும் அறிகுறிதான், நாம் கூறும் கருத்துகளை ஆதரிக்கும்மக்களின் தொகை, வளர்ந்து கொண்டு வருவது. இந்தவளர்ச்சி, மேலும் நமக்கு நல்ல உற்சாகத்தைத்தந்து, தொட்டவேலை தூய்மையானது—அதனைவிடாது தொடர்ந்து செய் என்று கூறுவது போன்ற உணர்ச்சி வேகத்தை நமக்கு உண்டாக்கிக் கொண்டே இருக்கிறது. இந்தஉண்மையை மாற்றாரும் மறுக்கமுடியாது. அந்தளவுக்கு நாம் வளர்ந்து விட்டோம்.

இன்னும் ஒரு சிலர் இருக்கிறார்கள், நம்மைப் பற்றிக் கேலி செய்பவர்கள். அவர்கள்தான், நாம் நம்மை நாத்திகர்கள் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுபவர்கள் என்று பிரச்சாரம் செய்யும் இந்த நாட்டுக் கம்யூனிஸ்டுகள். பார்ப்பான் என்ற சொல்லையே உச்சரிக்கும் துணிவற்ற துடை நடுங்கிகளாகிய இந்தக்கம்யூனிஸ்டுத்தோழர்கள், நம்மைப் பார்த்து நையாண்டி செய்வதுதான் வேடிக்கையாக இருக்கிறது. நாம் எடபொழுது நம்மை நாத்திகர்கள் என்று கூறிக்கொண்டோம்? இன்று முதல் நம்மை நாத்திகர்கள் என்றே எல்லோரும் அழைக்கவேண்டும் என்று எப்போது யார் முன்னிலையில் பிரகடனம் செய்துகொண்டோம்? கம்யூனிஸ்டுத்தோழர்களால் இதனை விளக்கமுடியுமா? நாம் எப்பொழுதுமே நம்மை நாத்திகர்கள் என்று கூறிக்கொண்டதில்லை — இனியும் கூறிக்கொள்ளப் போவதில்லை. நாம் நாட்டிலுள்ள நானாவித பேதங்களை ஒழித்து, மக்களனைவரையும் சரிநிகர் சமானமாக்கும் ஒப்பற்ற பணியினை செய்துவரும் பகுத்தறிவுவாதிகளே ஒழிய, நாத்திகர்களல்ல என்பதை நம்மைப்பற்றித் தவறுகக் கணக்குப் போட்டுக்கொண்டு நாவசைக்கும் கம்யூனிஸ்டு நண்பர்கள் உணரவேண்டுகிறேன்.

ஒரு உண்மையான பகுத்தறிவுவாதி, ஒருபோதும் தன்னை நாத்திகன் என்று சொல்லிக்கொள்ளவே மாட்டான். அப்படிச் சொல்லிக் கொண்டால், அவனுக்குப் பகுத்தறிவுவாதி என்ற பெயர் பொருந்தாது.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற அடிப்படையை வைத்து எதனையும் ஆராய்ந்து செய்பவர்கள் நாமாகையால், நாம் எப்படி நம்மை நாத்திகர்கள் என்று சொல்லிக்கொள்ளமுடியும்? இன்று நாட்டில் நடைமுறையில் காணப்படும் கடவுளும் மதமும், அவற்றிற்கு வகுக்கப்பட்டுள்ள இலக்கணங்களும், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு தேவையா?—ஒத்து வருபவைதானா? என்று ஆராய்ந்து, அந்த ஆராய்ச்சியின் பயனாக, இப்படிப்பட்ட கடவுளும் மதமும் நமக்குத் தேவையில்லை என்று கூறுகிறோம். மக்கள் சமுதாயத்தின் எந்தப் பகுதியிலும் குறுக்கிட்டுத் தன் ஆதிக்கத்தைச் செலுத்தாத—செலுத்த விரும்பாத ஒரு கடவுள் இந்நாட்டில் இருப்பதை என்றுமே நாம் ஆட்சேபித்ததில்லை. எனவேதான் நாம் நாத்திகர்கள் அல்லவென்று கூறுகிறோம்.

நாம் நாத்திகர்களுமல்ல; ஆஸ்திகர்களுமல்ல—பகுத்தறிவுவாதிகள். அறிவுக்குப் பொருந்தும் எந்தச் செயலும் உலகத்துக்கும் பொருந்துவதாகக் காணப்படும்பொழுது அந்தச் செயலையே நாம் மேற்கொள்கிறோம். நமக்குச் சரியெனப்பட்ட ஒன்று, மற்றவர்களுக்குத் தப்பெனப்படுவதைக் காணும்பொழுது நாம் அதைப்பற்றிச் சிந்திக்கிறோம்; சிந்திக்கும் அவகாசத்தை மற்றவர்களுக்கும் அளிக்கிறோம். அதாவது, நாம் எதனையும் ஒருவரின் நிர்ப்பந்தத்தின் காரணமாக ஏற்றுக்கொள்வதுமில்லை—மற்றவர்களை நிர்ப்பந்தித்து ஏற்றுக்கொள்ளும்படி செய்வதுமில்லை. இந்த அடிப்படையில்தான், நாம் நம்முடைய பகுத்தறிவுப் பாதையினை செப்பனிட்டு வருகிறோமே ஒழிய, நாம் நாத்திகர்கள் என்று கூறிக்கொண்டோ ஆஸ்திகர்கள் என்று கூறிக்கொண்டோ எந்தக் காரியத்தையும் செய்ததில்லை—செய்ய

(13-ம் பக்கம் பார்க்க)

பிறப்பு

இராமநாதபுர மாவட்ட தி. மு. கழகப் பொருளாளர் கமுதி E. L. M. சௌந்திர பாண்டியன் அவர்களுக்கு 24. 6. 54 தேதி ஓர் ஆண் குழந்தை பிறந்துள்ளது. அதற்கு "ஆசைத்தம்பி" என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

திராவிடநாடு

காஞ்சி] 4—7—54 [ஞாயிறு

ஆண்டு பதின்மூன்று!

★

ஆண்டு பதின்மூன்று! 'திராவிட நாடு' பணியாற்றத் தொடங்கிப் பனிரெண்டாண்டுகளைக் கடந்து விட்டது. பதின்மூன்றாமாண்டு துவக்கம் எனும் மகிழ்ச்சியூட்டும் செய்தியைத் தாங்கிக் கொண்டு, இந்த இதழ் வருகிறது. இது நாள் வரை அகமகிழ்ச்சியுடன் ஆதரவளித்த அன்பர்கட்கெல்லாம் நன்றியும் வணக்கமும் தெரிவித்துக் கொண்டு, மேலும் பணியாற்றும் வாய்ப்பினை அளித்திடுவீர் எனும் வேண்டுகோளுடன். பனிரெண்டாண்டுகள் பணியாற்றி இருக்கிறோம் என்பது, சாதாரணச்செய்தி அல்ல! அகன்றவாய் முதலைகள் அகழி நிரம்ப!! மதிற்சுவரோ, வழ வழப்பானது! மேலேயோ, உருக்கிய இரும்பினை மேலே ஊற்றிடும் எதிரிகள்! எனினும் அகழியைக் கடந்து, கோட்டைச் சுவரேறி, கொடிமரத்தைக் கைப்பற்றி விட்டோம் என்கிறபோது வீரப்படையினரின் அகமும் முகமும் எங்ஙனம் மலருமோ, அஃதே போன்ற மகிழ்ச்சிதான், சீர்திருத்த இயக்க ஏடொன்று ஈராறு ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றி, மேலும் பணியாற்றும் ஆற்றலுடன் விளங்குகிறது என்றசெய்தி கேட்போருக்கு ஏற்படும்.

சீர்திருத்த இயக்க ஏடுகள் எதிர் நீச்சுச் செல்பவை! எழில்தேடவும், பகட்டுக் காட்டவும் நேரம் கிடையாது, நினைப்பே எழாது. கூறவேண்டியனவற்றைக் கூறும் சக்தி இருக்கும்போதே, தேடித் தேடி நாட்டவருக்குக் கூறிடவேண்டும்; தாக்கி அழித்திட எண்ணுவோரின் கடைசி வெட்டு விழுமுன் ஊராருக்குக் கூறவேண்டிய உண்மைகளை முடிந்த அளவு உரைத்திடவேண்டும் என்ற இந்த நோக்கம் நெஞ்சிலே ததும்பும்போது, நேர்த்தியான மேலட்டையும், கண் கவரும் வடிவமும் தேடித் தந்திட இயலாது. 'திராவிடநாடு' மட்டுமல்ல, சமுதாயத்தில் பெரும் புரட்சிகண்டிடப் பணியாற்றும் எந்த ஏடும்! வைரம் இழைத்த வாளை, களம்காணாக் காவலன், சொகுசாக அணிந்துகொள்ள இயலும்—அது மட்டும்தான் இயலும்!—ஆனால் களத்திலே புயலெனச் சுற்றி, வளைத்துக் கொண்ட வஞ்சகர்களை விரட்டி அடித்திடும் போரில் ஈடுபட்ட வீரன் கரத்திலே உள்ள வாள், செந்நிறமேறி, வளைந்தும்கூடக்காணப்படும். பன்னெடுங் காலமாகக் கப்பிக்கொண்டிருக்கும் மூடப் பழக்கவழக்கங்களை வெட்டி வீழ்த்திடும் பணிபுரியும் ஏடு, காட்டும் எழில், அதன் மூலம் நாட்டிலே பூத்திடும் புதுமைக் கருத்துக்கள் மூலமாகத்தான் தெரிய முடியுமே தவிர, கண்டால் கவர்ச்சிதரும் மினுக்கினால் அல்ல.

பதின்மூன்றாம் ஆண்டு பிறக்கிறது, படைக்கலம் எனத்தகும் நிலையில் உள்ள ஏட்டினுக்கு. என்றால், அஃதொன்றே கூட வெற்றி என்று கூறத்தக்கதுதான். உலக வரலாற்றிலே தொடர்ந்து பனிரெண்டு ஆண்டுகள் பணிபுரியக்கூட முடியாமல் பாதகர்களின் சூழ்ச்சிக்குப் பலியாகிப் போனவர்கள் பலப்பலர்! நாடு வர்ணாஸ்ரப் படுகுழியில் வீழ்ந்து, 'நம்மவர்' நம்மை நாசம் விளைவிப்போர் என்று எண்ணி அழித்திட முனைந்த காலை, 'திராவிடநாடு', பணியாற்றக் கிளம்பிற்று. பெரும் வசதியுடன் அல்ல, பிரமாதமான வரவேற்புடன் அல்ல, பேழையுடனோ பெரும் அச்சகத்துடனோ அல்ல. ஆர்வம் ஒன்றன்றிவேறோர் அருந்துணைதேடாது, நடைபெறுகிற வரையிலே மகிழ்ச்சி என்றஎண்ணத்துடன், தேய்ந்தஅச்செழுத்து, தொட்டால் தூளாகும் தாள், இவைகளைத் தோழமை கொண்டு, வெளிவந்தது! வென்றது! திராவிடச் சமுதாயத்துக்குத் 'திராவிடநாடு' தோழனாயிற்று! பனிரெண்டாண்டுகள், 'பண்பு' கெடாத முறையிலே பணியாற்றி, ஆற்றிய பணிகண்டு நாடு மகிழ்கிறது என்பதறிந்து, மேலும் பணியாற்றும் ஆர்வத்துடன், வணக்கம் கூறிக்கொள்கிறது.

'திராவிடநாடு' இதழும், இன்று அதன் துணை இதழ்களாக உள்ளனவும், கொண்டுள்ள குறிக்கோள், ஒரு இதழ் எங்ஙனம் இருத்தல் இயலும் என்பதை எடுத்துக் காட்டுவதுமல்ல, ஒரு இதழ் மூலம் எவ்வளவு செல்வம் திரட்டலாம் என்பதை அறிந்திடுவதுமல்ல, சீர்திருத்தப்பணியாளன் ஒரு இதழை எங்ஙனம் பயன்படுத்துவது, அதன் மூலம், நாட்டுக்கு எத்தகைய அறிவூட்டுவது என்பதுதான். எனவேதான், 'திராவிடநாடு' இந்தப் பனிரெண்டு ஆண்டுகளாக, பணியாற்றி வந்ததில், அலுவலகத்தை அலங்கார மாளிகையாக்கினோம், அறுபது அச்சுக்கோப்போர் உளர், எழுபதாயிரம் பிரதிகள் வெளியிட்டோம், எட்டு பக்கம் விளம்பர நிலையாக இருக்கிறது சென்னையில் ஓர் கிளை, கோவையில் ஓர் கோட்டம், அலுவலகப் பொறுப்பாளருக்கு திங்களொன்றுக்கு ஐந்து நூறு ஊதியம், என்றெல்லாம் கூறத்தக்க நிலையை அடையவில்லை—அடையாததற்காக வேதனை கொள்ளவுமில்லை, வெட்கப்படவுமில்லை. துவக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை, இந்தக் கிழமை இதழ் மூலம் நாட்டுக்கு ஏதேனும் புத்தம் புதுக்கருத்தினை, மக்களை வாழவைக்கும் கருத்தினை அளித்திட முடிந்ததா — இந்தக் கிழமைஇதழ் மூலம், எந்த எத்தனைச்சாடுகிறோம், எந்தப் புரட்டினை அம்பலப்படுத்தினோம், எந்த அளவுக்கு மூடத்தனத்தை முறியடித்தோம், என்பதிலேதான் தனிக் கவலை செலுத்தி வந்திருக்கிறது. இனியும் குறிக்கோள் அதுதான்!!

பனிரெண்டாண்டுகள் பணியாற்றி, பதின் மூன்றாம் ஆண்டு துவக்கம்—இந்த இதழ் அச்சிடும் தாள், இனித்தான் அலுவலகம் வரவேண்டும்—நிலைமை அதுதான்!! எனினும், கடமையைச் செய்தோம் என்ற களிப்புடனேயே, பணிநடைபெற்ற வண்ணம் இருக்கிறது!

எப்படிப்பட்ட பணி என்பதை எண்ணிப்பார்த்திடும் நாளன்றோ இது. எனவே அதுபற்றிக் கூறுகிறோம். 'திராவிடநாடு' தன் பணியின் மூலம் தமிழகத்தில் ஓர் பகுத்

குற்றச்சாட்டு நமக்குச் செந்தேன்!

தறிவுப் பாசறையைக் காண எண்ணிற்று, இன்று அந்தப் பாசறை எதிரிகளும் கண்டு மெச்சத்தக்க வகையிலே அமைந்திருக்கக் காண்கிறோம்.

தமிழில் அரசியலையும் பொருளாதாரப் பிரச்சினைகளையும். உலக வரலாற்றினையும் உள்ளத்தில் கிளர்ச்சி எழத்தக்கவகையிலே தீட்டிட இயலுமா, அகம் தெரியுமா, புறம் அறிவாரா? தொல்காப்பியம் தனைத் தொட்டதுண்டா? ஏதறிவர், எங்ஙனம் தமிழ் தீட்டுவர், இலக்கணம் வழுவா முறையிலே, இலக்கியச் செறிவு துளியேனும் உள்ள வகையில் எழுதவல்லவரோ, இவர்களெல்லாம் செவிச்சுவை உணரா மாக்களன்றோ, தேன்சொட்டும் திருவாசகமும், இனிமை துள்ளும் சங்க நூற்களும், கற்பனை மணம் கமழும் கடவுட் காதைகளும் அறிவரோ, இவரிடம் தமிழ் எங்ஙனம் உறவு கொள்ளும், அகவல் அறியார், அந்தாதி தெரியார், கலம்பகம் கண்டவரல்ல, கட்டளைக் கலித்துறை படித்தோரல்ல, என்ன செய்வர், எமது அகத்தியன் அருளிய தமிழ் இந்தச் சழக்கருக்குத் துணைநிற்குமா? எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எனும் அடிப்படையேனும் அப்பழுக்கின்றி அறிவரா, என்று பேசினவர்களை 'திராவிட நாடு' அறியும். இன்று அவர்கள் சாட்டும் குற்றச்சாட்டு, தமிழின் அழகை முழுக்க முழுக்கப் பயன்படுத்திக்கொண்டு, மக்களை மயக்கி, தகுதிக்கு மேற்பட்ட 'செல்வாக்கை' இவர்கள் தேடிக்கொண்டார்கள் என்பதாகும். இந்தக் 'குற்றச்சாட்டு' செந்தேன்போல் இனிக்கிறது. ஆனால், இதைப் பெற, எத்தனை ஆண்டுகள் எத்தனை கசப்பையும் கடுகடுப்பையும், காச்சலையும் கடும் எதிர்ப்பையும், கண்டோம், உண்டோம், என்று எண்ணுகிறோம்; ஏக்கமல்ல, புன்னகை தவழ்கிறது, நம்மால் இவ்வளவையும் தாங்கிக்கொள்ள முடிந்ததே என்ற நினைப்பினால்.

பனிரெண்டு ஆண்டுகள் பணியாற்றினோம்—ஓர் பாசறையே அமைந்துவிட்டது.

துணை அதிகமின்றிப் பயணம் துவக்கினோம். இன்றோ, 'தோழர்கள்' அணிவகுப்புக் கண்டு அகமகிழ்கிறோம்! 'திராவிட நாடு' இன்று, பாலைவனத்து நீரோடை அல்ல; பாங்கான சோலையிலே மெல்லிய பூங்காற்றெழுப்பும் பணியாளன். அந்தச் சோலைதான் எவ்வளவு சோபிதத்துடன் இன்று இருக்கிறது! எத்தனை எத்தனை துறைகளிலே, இன்று எழில் நடமிடக் காண்கிறோம்! இருளை அகற்றிடும் இன்பக் கதிர்கள், எங்கும்!! நம்பிக்கை நாதம்! விடுதலை முரசொலி! வெற்றிப் பண்! ஆம்! ஆம்!! 'திராவிடநாடு' இன்று, வீரர் பலர் புடை சூழ உலா வருகிற காட்சி காண்கிறோம்; ஒளி அளிக்கும் வீரர்காள்! வாரீர்! என்று நாடு அன்புடன் அழைத்திடும் பொற்காலம் காண்கிறோம். தமிழ் அறிவரோ என்று பேசினோர், தமிழ் தந்த செல்வமப்பா இவ்வளவும்! என்று பேசுமளவுக்கு, ஓர் வாய்ப்பான கட்டம் காண்கிறோம். இந்த மகிழ்ச்சியை மாலையாக அணிந்துகொண்டு. மருட்சி நிரம்பிய கண்களுடன் தமிழகத்தைக் கண்டு உரையாட, கருத்தளிக்க, கருத்தைப் பெற, புறப்பட்ட 'திராவிட நாடு' நலம், நலமறிய அவா! என்று நாட்டவரிடம் உரையாடும் நண்பனென்ற நிலையை அடைந்திருக்கிறது!

'திராவிடநாடு' — கொண்டுள்ள எண்ணம், திராவிடத் தனி அரசு அமைக்கப்படுகிறது என்ற வெற்றி அறிக்கையை வெளியிடும் பொன்னாள் புலருவதற்கான பணியாற்ற வேண்டும்—ஆதரவாளர்கள் அதற்கான நல்வாய்ப்பினை நல்க வேண்டும், என்பதுதான். அன்பர் அருளும் ஆதரவு, 'திராவிடநாடு' ஆர்வம் பெற உதவுகிறது, நம்பிக்கை வளருகிறது, எனவே, உரிமையுடன் மேலும் ஆதரவு கேட்கும் முறையிலே, பேசுகிறது.

ஆற்றியுள்ள அரும் பணியினைக் காட்டிமட்டுமல்ல, இனி ஆற்றிட வேண்டிய பெரும்பணிகளை நினைவுபடுத்தி ஆதரவு கேட்கிறது.

பலப்பல வெற்றிகள் கண்டிருக்கிறோம்—இல்லை என்று எதிரியும் கூறார்.

தமிழின் இனிமையை நாடு அறியும் நற்பணியினை ஓரளவு வெற்றியுடன் செய்திருக்கிறோம்.

பழந்தமிழரின் நெறியினை அறிந்திடவும், இடையே புகுந்த ஆரியத்தைக் களைந்திடும் உறுதி பெறவும், பணியாற்றினோம்.

புராணப்புரட்டுகளை, மதத்தின் பேரால்நடைபெறும் அக்ரமங்களைச் சாடிச்சாடி, இன்று புராணிகர்கள் புதுப்பொருள் தேடவும், மடாதிபதி மக்களிடம் மன்றாடவுமான நிலைவளரக் காண்கிறோம்.

கற்பனைச் சேற்றிலே கழுத்தளவு புதைந்து போயிருந்த 'ரசிகர்கள்' கூட, திருக்குறளின் மேம்பாட்டினை எடுத்துரைத்திடும் ஏற்புடைய செயலில் ஈடுபடக் காண்கிறோம்.

உலகிலே, நடைபெற்ற எந்த நிகழ்ச்சியையும் பற்றிக்கவலையற்றுக் கிடந்த ஓம் நமச்சிவாயங்கள், இன்று, உலக வரலாறு தேடி அலையும் 'புதுஜென்மம்' எடுத்திடக் காண்கிறோம்.

இவைகள் எல்லாவற்றையும் விட. நமது இன்னுயிர் எனத்தக்க, 'தனி அரசு' தத்துவம், இன்று எங்கும் கேட்கும் இன்பக் கவிதையாகி இருப்பதைப் பெருமிதத்துடன் காண்கிறோம். நாம் திராவிடர், வீரர்—நம்மை வீணர் வஞ்சகத்தால் வீழ்த்தினர், என்ற பேருண்மையை மக்கள் அறிந்து, இனி நாம் இடர் களைந்து விடுதலைச்சுடர் கொளுத்துவோம், தாய்த் திருநாட்டின் மீது தன்னலக்காரர் பூட்டியுள்ள தளைகளை அறுத்தொழிப்போம், அந்த திருத்தொண்டுக்கு நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்வோம், என்று எழுச்சி பெற்ற நிலை காண்கிறோம்—வாகை! வாகை! வாகை சூடியே தீருவோம்! என்ற நல்லதோர் நம்பிக்கை பெறுகிறோம். ஆம்! பெற்றுள்ள வெற்றிகள் பெருமைக்குரியன! ஆனால் இனிப்பெற வேண்டிய வெற்றியுடன் ஒப்பிடும் போது........!!அந்த வெற்றி!!

இனி, கடும்போரில் வெற்றி காணவேண்டும்

இன்பத்திராவிடம்! நமது தந்தையர் நாடு! எத்தனென்றும் ஏமாளி என்றும், உயர் குலத்தோனென்றும், தாழ்ந்தவனென்றும், முதலாளி என்றும் தொழிலாளி என்றும் உள்ள கொடுமையும் மடைமையும் ஒழிக்கப்பட்டு, கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக என்ற குறிக்கோள் ஈடேறி, ஒன்றே குலம் என்ற உத்தமக் கோட்பாடு வெற்றி பெற்று, சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற வசதி என்ற தத்துவம் நடைமுறையாகி, அன்பும் அறமும் செழித்து, இன்பம் பெருக்கெடுக்கும் எழிலோவியமாகத் திராவிடம் அரசோச்சும், அந்நாள் காண வேண்டும்! அதற்கே எந்நாளும் உழைத்திட வேண்டும், நமது ஆற்றல் அவ்வளவும், அந்தத் திருநாள் காணத்தான் செலவிட வேண்டும். எந்தத்துறையில் கிடைக்கும்வாய்ப்பும் இந்த நோக்கத்துக்கே பயன்படுத்தப்படவேண்டும். பொன்நகை முதல் புன்னகை வரையிலே, காதலிக்கும் கட்டழகிக்குக் காளை காணிக்கை ஆக்குவர், காதற்கடமை உணர்ந்தோர்! அஃதே போல, நம் நெஞ்சிலே அரசுசெலுத்தி, நமது கண்களிலே ஓர் புத்தொளியூட்டும், இலட்சியமெனும், மங்கை நல்லாளுக்கே எல்லாம்!! இடையே சடை காட்டி இடையாட்டி, கானம்பாடி காமமூட்டி காரிகை வருவாள்—கருத்தழியக்கூடாது—அதோ! என் இதயராணி! என்று கூறி, குலுக்கி நடந்து வரும் கொவ்வை அதரத்தாள், வெட்கித் தலைகுனிந்து தோற்றோடச் செய்திடல் வேண்டும். பெரும் பணியாற்றிட வேண்டும் கட்டம் இது! நம்மை நாம் அறிந்து கொண்டோம், நாமிருக்கும் நாடு நமது என்பதைத் தெரிந்து கொண்டோம். இங்கு வீணர் உண்டு கொழுத்திடக் காண்கிறோம், உழைப்போன் அடிமையாகிடக் காண்கிறோம், சொந்த நாட்டில் பிறர்க்கு அடிமையாகிச் சோர்ந்து கிடப்போரைக் காண்கிறோம். விடுதலைப் போரைத்துவக்கி விட்டோம்! போர், கடுமையாக இருந்தே தீரும்! களம் கண்டு வந்துள்ளோம்—இனிக் கடும் போரில் வெற்றி காணவேண்டும், அப்பணியே பெரும்பணி, அதற்கான ஆற்றலை அளித்திடும் வாய்ப்பினை, 'திராவிடநாடு' பெறவிரும்புகிறது. அளித்திட வாரீர் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

வெண்புறா பறக்கிறது, வேடனும் உலவுகிறான்! என்று கூறத்தக்க நிலைதான் இன்று—புத்தறிவும் புத்தார்வமும் இருக்கிறது, போர்க்கோலம் பூண்ட விடுதலை வீரர்கள் உள்ளனர், எனினும் பழமையின் பாதுகாவலர்களும் ஆதிக்க வெறியர்களும் புறமுதுகிட்டு ஓடிவிடவில்லை. படைக் கலத்தைக் கீழே போட்டுவிடவில்லை, பதுங்கிக் கொண்டுள்ளனர், தாக்க! வஞ்சகம் இனி வேகமாக வீசப்படும்! வழியிலே படுகுழிகள், மேலே பச்சை இலைப்போர்வை! இந்நிலையில், 'திராவிட நாடு' அறப்போர் முரசு கொட்டும் அரும்பணியை, இதுவரை செய்ததைவிட முனைந்து செய்து தீரவேண்டும்.

பனிரெண்டாண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட, இன்று உலகுக்கும் நமது மக்களுக்கும் உள்ள தொடர்புகள் அதிகம்.

உலகிலேயோ, நிகழ்ச்சிகள், வேக வேகமாக நடைபெற்ற வண்ணமுள்ளன.

கருத்தலைகள் பலப்பல-பிரச்சாரப் புயலும் சாமான்யமானதல்ல.

மக்களிடை மலர்ந்துள்ள அறிவு வேட்கையை வாய்ப்பாக்கிக் கொண்டு, மோகவிடாய் கொண்டவனுக்கு நஞ்சூட்டிச் சாய்த்திடும் கெண்டைவிழிக்காரிபோல, மக்கள் மனதிலே 'செய்திகளை'ப் புகுத்தி, அவர்களைச் சொக்கவைத்து, 'ஆமாம் சாமி'களாக்கிடலாம் என்ற தீதான திட்டமிட்டுத்திரிபவர்களும் உளர்!

நாடு மீட்கும் காரியம் எத்துணை ஆபத்து நிரம்பியது என்ற அச்சத்தை மூட்டி, வீரரையும் விரண்டோடச் செய்ய எண்ணும் வன்னெஞ்சர் உளர், கொஞ்சு மொழியும் பேசுகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில், 'திராவிட நாடு', உலகப் பிரச்சினைகளை மக்கள் ஆய்ந்தறிந்து. திராவிடத் திருநாட்டினைப்பெறும் அறப்போருக்கு, அந்தப் பிரச்சினைகள், எவ்வகையில் பயன்படவேண்டும் என்று எடுத்துரைக்கும் பணியினை மும்முரமாகச் செய்ய விரும்புகிறது.

முற்போக்குக் கட்சிகளிடையே மூண்டுவிடும் மாச்சரியங்களை மட்டுப்படுத்தவும், கட்டுக்குக் கொண்டுவரவும், இயலானால் அடியோடு களைந்திடவும், 'திராவிட நாடு' பணியாற்றும்.

ஆர்வம் ஆர்ப்பரிப்பு ஆகிவிடாமலும்; அமைதி செயலற்ற போக்காக மாறிவிடாமலும், பார்த்துக் கொள்ளவேண்டும்.

கொள்கைப்பற்று குறைந்திடாத தன்மையும் வேண்டும் — பிற கொள்கையாளர்களின் மனதை மாற்றி, நட்புரிமை கொண்டாடும் வகையும் அறிதல்வேண்டும்.

அறப்போர்த் திறனும் வளர வேண்டும், ஆக்கவேலைப் பயிற்சியும் நிரம்பவேண்டும்.

போரிடும் முறையுடன் பாதுகாத்துக்கொள்ளும் பக்குவமும் தெரிந்திடவேண்டும்.

துணை தேடிப் பெறும் போக்கும் வேண்டும்; துணை என்ற வடிவில், பிணி வந்து சேராமற் பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

அறிவு திரட்டிப் பரப்பும் ஆர்வமும் வேண்டும்; அதனையே மனச்சுமையாக்கிக்கொண்டு செயல் மறந்திடும் நிலை ஏற்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டும்.

நமது இலட்சியத்தை அடைவதற்காக, எந்தெந்தத் துறைகளிலே துணை தேடலாம், வாய்ப்புக் காணலாம் என்ற முறையிலே ஆர்வம் வேண்டும்; எதிலும் சிறைப்பட்டுவிடாத திறமையையும் பெற்றாக வேண்டும்.

ஒத்த கருத்தினர் உள்ள இடமெல்லாம் கண்டறிந்து உறவுகொண்டாடவேண்டும்; அதுகாலை, உள்

வீண் ஆரவாரத்தில் சபலம் தட்டக்கூடாது

றொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவுகலவாமையும் வேண்டும்.

விழிப்புணர்ச்சி நிரம்பவேண்டும். வீண் ஆரவாரத்தில் சபலம் தட்டக் கூடாது.

பொலிவும் வலிவும் தேடவேண்டும்; ஆனால் அதுதான் பயணத்தின் கடைசி கட்டம் என்ற எண்ணம் எழலாகாது.

நிரம்ப வேலை இருக்கிறது, நண்பர்களே! நிரம்ப இருக்கிறது!

இதுவரை நாம் செய்தவேலை, மலையைக் குடைவது என்றால், இப்போது பெரும் பாறைகளைக் கனி பட வைத்திடவேண்டும்.

யாழ் கிடைத்துவிட்டது. இனி இசைப் பயிற்சிவேண்டும்.

கூர்வாள் கிடைத்து விட்டது, இனிக் குறி பார்த்து வீசும் பயிற்சி வேண்டும்.

மீசை அரும்புகிறது, இனி அற்ப ஆசைகள் அருப்பலாகாது, ஏறு! ஏறு! ஏறு! முன்னேறு! இலட்சியப் பாதையில்!—என்று செல்லவேண்டும்.

'திராவிட நாடு' இந்தக் கட்டத்தில், பணிபுரியும் வாய்ப்புப் பெறுவதை எதிர்பார்த்து, உங்கள் ஆதரவைக் கேட்கிறது.

'திராவிட நாடு' யாரையும் அனாவசியமாக அலட்சியப்படுத்தாமல், ஆனால் அதேபோது எவருக்கும் அடிமைப்படாமல், யாரையும் தூற்றாமல், எவருக்கும் துதி பாடிடாமல், அதேபோது எந்த உண்மைக் கருத்தையும் எடுத்துரைப்பதிலே ஊறு நேரிடுமோ என்று அஞ்சிடாமல், மாற்றார் யாரைப் பற்றியும் பொறாமையுள்ளம் கொள்ளாமல், பொச்சரிப்புக்கொண்டோர்க்கும் பொறுமை கண்டு புன்னகையைப் பதிலாக வீசிவிட்டு, நேர்மை வழியினின்றும் நெறி தவறாமல் பணி ரெண்டாண்டுகள் பணியாற்றி வந்திருக்கிறது—இனியும் அந்த முறையிலேயே பணியாற்றும் பனிரெண்டாண்டுப் பயிற்சி பணியின் தரத்தையும், அதனாலாய பயனையும் வளர்ச்சி அடையச் செய்திருக்கிறது என்பது எவரும் ஏற்கும் உண்மையாகும்.

எனவே, இந்த பதின்மூன்றும் ஆண்டு துவக்கம், மகிழ்ச்சியும் நம்பிக்கையும் கலந்ததாக அமைகிறது.

'திராவிட நாடு' இன்று தனித்திருக்கும் நிலையில் இல்லை—அறிவீர்கள்.

இதோ என் இளவல், வேல்வீச்சு வல்லோன்! அதோ என் உடன் பிறந்தோன், காதலி வீசும் பூச் செண்டை எடுத்து மகிழத்தக்க பருவத்தினன், ஆனால், அதோ எதிரி வீசிய எறி ஈட்டி, அதனை எடுத்தெறிந்து விட்டு, புலி எனப் பாய்கிறான் பாரீர். இந்த ஏறுநடை இளைஞன், சங்க காலத் தமிழின் தனிச் சிறப்பினை விளக்கிடும் பண்பினன்! அந்தக் காளையா! கண்டீரா! அவன் கண் உமிழும் கனலை! புரட்டர், கள்ளமில்லா உள்ளம்படைத்தோரைக் கெடுத்திடும் போக்கினைக் கண்டு சினங் கொண்டு கிளம்பிக் களம் சென்று கடும் போரிடும் வீரன். நல்ல தம்பிகள்! நாட்டை மீட்டிடும் நற்பணியாற்றிடும் தங்கக் கம்பிகள்! என்று கூறிக் களிப்படையும் 'மூத்த மகன்' திராவிட நாடு! ஆதரவு அளித்திடும்படி கேட்கும் உரிமை கொண்டது, உங்கள் ஏடு, 'திராவிட நாடு'. ஆதரவு தந்து, அதன் பொலிவும் வலிவும் வளரச் செய்யும் பொறுப்பு உம்முடையது. அதை அறிந்து நடக்கும் ஆற்றல் அறிந்தவர்கள் நீவிர்.

வணக்கம்.

அன்பன்,
அண்ணாதுரை

சித்தூர் மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு

ஜூலை 10, 11 தேதிகளில்

பொதட்டூர்ப் பேட்டையில் நடைபெறும்

10—7—54 சமூக மாநாடு

தலைவர்: அ. பொன்னம்பலனார் :: துவக்குபவர்: கே. ஆர். இராமசாமி

11—7—54 அரசியல் மாநாடு

தலைவர்: ஏ. எல். சி. கிருஷ்ணசாமி :: துவக்குபவர்: இராம. அரங்கண்ணல்

யார் பைத்தியக்காரர்கள்?

"நிர்வாண நாட்டிலே, கோவணம் கட்டியவன் பைத்தியக்காரன்!"

பல நேரங்களிலே உதாரணத்திற்கு கூறும் இப்பழமொழி, உண்மையிலேயே நடந்த, நடக்கும் சம்பவமானால் நீங்கள் பைத்யக்காரர்கள் தானே!

என்ன யோசிக்கிறீர்கள்? நிர்வாணமாவது, நாடாவது, என்று?

உங்கள் எண்ணத்தை சில மாதங்களுக்கு முன்பு கொண்டு செல்லுங்கள். அலகாபாத்திலே கும்பமேளா நடந்ததே ஞாபகத்திற்கு வருகிறதா? அங்கே நிறுத்துங்கள் நினைவை!

கும்பமேளாவிற்கு கோடிக்கணக்கில் பக்தர்கள் வந்ததும், அதில் ஆண்டவனை பிறந்த மேனியில் தரிசிக்க நாக சாதுக்கள் எனப் படுவோர் நிர்வாணமாக ஊர்வலம் வந்ததும், அப்படி வலம் வந்த ஆண், பெண் அடங்கிய அந்த சாதுக் கூட்டத்தைத் தரிசிக்க பக்தி முத்தியவர்கள் பறந்தோடியதும், அதன் விளைவாக ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டதும் நன்கு தெரியும். வெட்கமும் வேதனையும் போட்டி போட, வேறு வழியின்றி, இந்தத் துயர் மிக்க சம்பவத்தை விசாரித்து விளக்கம் கூற ஒரு கமிட்டியை நிறுவியிருக்கின்றது, நேரு அரசாங்கம்.

கும்பமேளாவின் குழப்பத்திற்குள்ள உண்மைக் காரணத்தை தங்களுடைய கத்தை ரிப்போர்ட்டில் மறைத்துவிட முயலும் விசாரணைக் குழு, தெரியாத்தனமாக ஒரு கேள்வியைக் கேட்டு ஆபத்தில் சிக்கிக் கொண்டது.

சென்ற வாரத்திலே, அலகபாத் பல்கலைக்கழக வடமொழி போராசிரியர், பண்டிட் க்ஷ்ட்ரேஷ் சந்திர சட்டோபாத்தியா என்பவரை விசாரணை செய்தது இக்குழு. வடமொழி போராசிரியர் என்ற முறையிலே, வேதம், பாஷ்யம், இதிகாசம் முதலிய ஹிந்துமத அடிப்படை நூட்களுக்கு அதிகார பூர்வமாக விளக்கம் கூறும் நிபுணரான இவரை கும்பமேளாவின் தாத்பரியத்தை விளக்கி, நாக சாதுக்கள் நிர்வாணமாக வருவதை அனுமதிக்கலாமா என்று கேட்டனராம். அவ்வளவுதான்! பண்டிதருக்கு ஏற்பட்ட படபடப்புக்கு அளவில்லை. "அவர்கள் அதை நம்புகிறார்கள். அதை தடை செய்ய நமக்கென்ன யோக்கியதை இருக்கிறது? இந்த மாயா உலகத்தைத் துச்சமென மதித்து ஆண்டவனை நினைத்துச் செல்லும் அந்தச் சாதுக்களை பக்தியோடு பார்ப்பவர்களுக்கு எதுவும் தோன்ற நியாயமில்லை. அவர்களைக் கண்டால் மனதில் கெடுதலான எண்ணம் எழும் என்று கூறுவது சரியில்லை!" என்று கூறி விட்டார்.

விசாரணைக் குழுத்தலைவர் திகைத்தார். "மக்கள் அவர்களை பக்தியோடு பார்ப்பது என்பதுதானே மிகக் கஷ்டமான விஷயமாயிருக்கிறது?" என்றார்.

பண்டிதர் முறைத்தார். "மதம் நம்பிக்கையிலே வளர்வது, அதைத் தடுப்பது சரியில்லை. சாதுக்கள் நிர்வாணமாக ஊர்வலம் வருவதை தடை செய்யக்கூடாது!" என்று கூறிவிட்டார்.

அதற்கு மேல் குழுத் தலைவர் எதுவும் கூறவில்லை. நாமும் என்ன கூற முடியும்? நிர்வாண நாடு இது. இதிலே நாம் பைத்யக்காரர்கள் என்று அழைக்கப்பட்டால் ஆச்சர்யப்படுவதிற்கில்லை!

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுபித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

இதுவே சொர்க்கம்

கண்காணு இடத்திலே சொர்க்கமென்றோர்
கட்டுக்குள் அடங்கி நிற்கும் எல்லை உண்டு
மண்காணு ததனை யென்னும் புராணப் பேச்சை
மனத்துக்குள் வாங்காதே, தமிழா! இங்கே
எண்காணு வளமெல்லாம் படைத்து வாழ்ந்தால்
இதுவேதான் சொர்க்கமடா தம்பீ, வீணே
விண்காணுய் அமரர்களைக் காணுயென்று
மின்னல்தவழ் வானகத்தைப் பார்க்கவேண்டாம்
இருள் நிறைந்து மனிதருள்ளம் ஞானம் நீங்கி
எழிலழிந்தும் மனைகளெல்லாம் புழுதி பூத்து
மருள் செறிந்து நாட்டினிலே வளங்கள் மாய்ந்து
மக்களெல்லாம் தொழுமாடாய் விலங்காய்ப் போனுல்
அருள் மிகுந்து தெய்வமெலாம் கூடி இங்கே
ஆட்டங்கள் போட்டாலும் நரகம் ஈதே
இருளொழிந்து மனிதரெலாம் அறிவால் ஓங்கி
இன்பவாழ் வடைந்து விட்டால் இதுவே சொர்க்கம்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வும்மாட்டோம். அது நமக்குப் பழக்கமுமில்லை—பழக்கப்படவுமில்லை. சில சந்தர்ப்பவாதிகளைப் போல் சமயம் நேரும்போது ஒருவரைப் புகழ்வதும், மற்றொரு சமயம் அவரையே இகழ்ந்து பேசுவதுமான இழி தன்மையை நாம் எப்பொழுதுமே மேற்கொண்டதில்லை. கம்பனைப் புகழும்போது, ஷெல்லியைக் கம்பனின் கால்தூசுக்குச் சமானமாக்குவதும், ஷெல்லியைப் புகழும் வாய்ப்பு நேரிடும்போது, கம்பனைக்கண்ணுக்கெட்டாததூரத்தில் நிறுத்திவைப்பதுமான நேர்மையற்ற செயலை நாம் எப்பொழுதுமே மேற்கொள்ளமாட்டோம். அது பொதுவுடைமையின் பொருளறியாத புல்லர்களின் வேலை. கம்பன் நாட்டுக்கு ஏதாவது நல்ல காரியம் செய்திருந்தால் (செய்யவில்லை) அவன் செய்த அளவுக்கு அவனைப் புகழ நாம் தவறமாட்டோம். ஷெல்லி நாட்டுக்குத் தேவையான நல்ல காரியத்தைச் செய்திருந்தால், அவன் செய்த காரியத்தையும் பாராட்டவே செய்வோம். சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு சறுக்கி விழுவதும், விழுந்தபின் எழுந்து மீசையில் மண் ஒட்டவில்லை என்று கூறிக் குட்டிக்கரணம் போடுவதும் பொது வாழ்வில் ஈடுபட்ட நமக்குப் பழக்கமில்லாத ஒன்றாகும்.

சமுதாயத் துறையிலேயும் சரி, அரசியல் துறையிலேயும் சரி, எந்த நல்ல காரியம் யாரால் செய்யப்பட்டபோதிலும், செய்த ஆளை மனதில் கொள்ளாமல், செய்யப்பட்ட செயலின் தன்மையைக் கொண்டே அதனை செய்து முடித்தவரை பாராட்டுவோம்—பாராட்டியிருக்கிறோம். சமுதாயத் துறையிலே புரட்சிகரமான மாறுதல்களைச் செய்த இராஜாராம் மோகன்ராய், கமால்பாட்சா, சன்யாட்சன் ஆகியோரைப் பாராட்ட நாம் தவறியதில்லை. அதேபோல, அரசியல் துறையிலே நாட்டுக்கு நல்ல காரியம் செய்யும்போது, யாராயிருந்தாலும் அவர்களைப் பாராட்டத் தவறியதில்லை. தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கோயில்நுழைவு, இருதார மணத் தடை, பெண்களுக்குச் சொத்துரிமைபோன்ற நாட்டுக்குத் தேவையான நல்ல காரியங்களை, நமக்கு எதிர்க்கட்சியினராயுள்ள காங்கிரஸ்காரர்கள் செய்தபோது நாம் அவர்களைப் பாராட்டியிருக்கிறோம். அதேசமயத்தில், வேண்டாத புதுப் புது வரிகள் போடும் போதும், தேவையில்லாத திட்டங்களை வகுக்கும் போதும் நாம் அவர்களை எதிர்த்திருக்கிறோம்—எதிர்ப்போம். இப்படியில்லாமல், யார் ஆட்சிக்கு வந்தபோதிலும், யார் சமுதாயத்துறையில் எந்த நல்ல காரியத்தைச் செய்தபோதிலும், 'அவர்கள் நம்முடைய கட்சி ஆட்களா? அப்படியானால், அவர்களை ஆதரியுங்கள்; இல்லையானால் பகிஷ்கரியுங்கள்' என்ற போக்கில் நடந்துகொள்ளும் குறைமதியை நாம் என்றுமே பெற்றதில்லை—இனியும் பெறமாட்டோம்.

இன்று, நம்முடைய நாடு அடைந்துள்ள சீர்கேட்டினைக் கவனித்துப் பார்க்கும்பொழுது, நாட்டுக்குச் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களை இவை இவை என்று எடுத்துக்கூற நாளும் ஏடும் போதாது. நாளடைவில் சிறிது சிறிதாகவே நம்முடைய பொருளுமையை இழக்காமல் கூறி விளக்கவேண்டிய பல பிரச்னைகள் உள்ளன. இங்கே நாம் சீர்திருத்தப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கும் இதே நேரத்தில் தான் திருப்பதி ஏழுமலையானுக்கு 2—இலட்சத்து 50-ஆயிரம் ரூபாய் செலவில் 'வைகுண்ட ஹஸ்தம்' என்ற பெயரால் ஒரு ஆபரணம் செய்து அலங்கரிக்கிறார்கள். நோய் வராமல் தடுக்க கடவுளால் முடியாது, மருத்துவனால்தான் முடியும் என்று பிரச்சாரம் செய்துகொண்டிருக்கும் இதே நேரத்தில்தான், வேறொரு திசையில்; நோய்வராமல் தடுக்க, நிர்வாணப் பெண்கள், மயானத்தில் நின்று கொண்டு யமனை நோக்கி பூஜைசெய்கிறார்களாம். இப்படியொரு சம்பவம் ஜோத்பூர் என்ற கிராமத்தில் 6—6—54-ல் நடைபெற்றதாகப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. அது மட்டுமல்ல, 'சமுகப்; சாதி ஏனப்பான்மை கூடாது அது சுதந்திர இந்தியாவுக்கே ஆபத்து' என்று நம்முடைய சார்பில் பேசுவதுபோல், ஐயப்பனை அவனி முழுவதும் பவனிவரச்செய்வதால், மட்டுமே நாடு முன்னேற்றமடையமுடியும் என்றமுறையில் பணியாற்றிவரும் நண்பர் பி. டி. இராஜன் கூறுகிறார்.

'ஆண்டவன் பேரால் அநேக கோடி பணத்தை, விரயம் செய்யாதீர்கள்' என்ற சீர்திருத்தப் பிரச்சாரத்தைச் செய்துகொண்டிருக்கும் இதே சமயத்தில்தான் 'சிகரெட்பிடிப்பதற்குமட்டும் 33-கோடி ரூபாய் செலவுசெய்யும் மக்கள், கடவுளுக்கு ஏதும் செய்யவில்லையே என்ற கவலையைத் தெரிவிக்கிறார்கள்.

ஆரியர் வேறு திராவிடர் வேறு என்று தக்க ஆதாரங்கள் எடுத்துக் காட்டி, திராவிடர்களாகிய நாம், எல்லாத் துறையிலும் தனியிடம் பெறவேண்டும் எனப் போராடிக் கொண்டிருக்கும் இதே நேரத்தில் தான், 'ஆரியனாவது தமிழனாவது, திராவிடனாவது, அதெல்லாமொன்றுமில்லை, என எக்காளக் குரல் எழுப்பும் அரசியல் அஞ்ஞானிகள் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஆகவே, சீர்திருத்தவாதிகளாகிய நாம் எவ்வளவு முயன்று எவ்வளவு நல்ல காரியங்களை நாட்டுக்குசெய்து கொண்டுவந்தபோதிலும் அவற்றையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளாமல்—காதில் போட்டுக்கொள்ள விரும்பாமல் ஆங்காங்கும் சீர்திருத்தத்துக்கு எதிரான காரியங்களை இன்றும் சிலர் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். இவற்றைக் கண்டு நாம் சலிப்படைந்துவிடாமல் இப்போது செய்து வருவதைக் காட்டிலும், தீவிரமாகவும் உற்சாகமாகவும், உள்ளம் தளர்ந்துவிடாமலும் பகுத்தறிவுப் பாதையினை செப்பனிடும் பணியில் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்வதோடு, இந்தச் சீர்திருத்த மாநாட்டுக்குத் தலைமைதாங்கும் வாய்ப்பினைத் தந்த வரவேற்புக்குழுவினருக்கு மீண்டும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

★

8. பாக்யபவனம் இருண்டது.

கார் தோற்றமளித்ததும் தன்னுடைய மேக்கப்பை இன்னும் கொஞ்சம் சரி செய்துகொண்டு மார்பின் மேல் ஓடிய தாவணியை காற்றிலே பறக்கவிட்ட வண்ணம் தூணின்மேல் கையை வைத்துக் கொண்டு சிரித்தமுகத்தைத் திருப்பிக்காட்டி வரவேற்றாள், நளினி.

அவளுடைய வசீகரப்பார்வையில் இருந்த காந்தசக்தியால் ஆறுமுகமே மயங்கி ஒரு விநாடி முழித்துவிட்டான்.

கோயிலிலே புதிதாகச் செதுக்கப்பட்ட சிலைபோல அங்கங்கள் ஒவ்வொன்றின் அமைப்பும் ஆடை ஆபரணங்களால் அழகு செய்யப்பட்டிருந்ததால் ஆறுமுகம் இதுவரை பார்த்த பெண்களிலேயே கவர்ச்சியோடு கூடிய பெண் இவள்தான் என்று எண்ணக் கூடிய அளவிலே நளினி இருந்தாள்.

காரைவிட்டு இறங்கிய பிள்ளை அவளைப் பார்த்ததும் அப்படியே திகைத்து நின்றுவிட்டார்.

''நமஸ்காரம்' என்று கூறிக் கொண்டே ஒரு வெட்டு வெட்டி பரத நாட்டிய பாணியில் கையைத் தூக்கி கும்பிட்டு வரவேற்றாள் நளினி.

பிள்ளை அவளைப் பார்த்து திகைத்தவண்ணமே மெதுவாக கைத்தடியை எடுத்து ஊன்றி நடக்க ஆரம்பித்தார், அதற்குள் அவளே ஓடிவந்தாள். அவர் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு சென்றாள்.

"சும்மா இருக்கட்டும் ஒரு வாரமா உடம்பு சரியாயில்லை... ஹி ...ஹிஹ்ஹி!" என்று இளித்தார் பிள்ளை.

"ஆமாம்... அப்பாகூட சொன்னாங்க. அதனாலேதான் வருவீங்களோ மாட்டீங்களோ என்று நினைத்தேன்."

"வராமல் என்ன? ஆனால் ஜமதக்கினிக்கு இவ்வளவு அழகான பெண்ணிருக்குன்னு இப்போதுதானே தெரியுது!" என்றார் அவர். அவளுடைய மோகனச் சிரிப்பைக் கவனித்தவண்ணமே.

அவளுடைய முழுக்கிருப்தியில் வெற்றியைக் கண்ட நளினி ஆறுமுகத்தின் மேல் ஒரு கண் வீச்சை வீசிவிட்டு ஹாலுக்குள் சென்றாள், பிள்ளையை அழைத்துக் கொண்டு.

ஆறுமுகம் அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் சிரித்துக் கொண்டே பழையபடி பலகைமேல் வந்து உட்கார்ந்து கொண்டான்

உள்ளே சென்றாள் நளினி சில நிமிஷங்களில் கையில் நாலைந்து பொட்டலங்களோடு வெளியே வந்தாள்.

"இந்தா ஆறுமுகம் இதைச் சாப்பிட்டுப்போய், காரிலே படுத்திரு என்று கூறிக் கொண்டே அவைகளை அவன் முன்னிலையில் வைத்தாள்.

எழுந்துநின்று "சரி, அம்மா...!" என்று கூறி அவளுக்கு நன்றி செலுத்தினான். அவளும் சிரித்துக் கொண்டே உள்ளே போனாள். அரைமணிநேரத்திற்கெல்லாம் அங்கிருந்த சாப்பாட்டுப் பொட்டலங்களை பிரிக்க ஆரம்பித்தான் ஆறுமுகம் அதே நேரத்தில் உள்ளே பாட்டில் உடைக்கும் சப்தம் 'டபார்!' என்று கேட்டது.

உள்ளே பூஜை ஆரம்பமாகி விட்டது' வெளியே ஆறுமுகம் வெறும் பிரியாணியையும், கறியையும்சுவைக்க ஆரம்பித்தான்!

பாதி சாப்பிட்டுக் கொண்டிருந்தான் திடீரென்று "ஆறுமுகம்! ஆறுமுகம்!" என்று பிள்ளைகூப்பிடு வது காதில் விழுந்தது.

எழுந்து உள்ளே ஓடினான். அங்கே அவன் கண்ட காட்சி அவனுடைய நரம்புகளையெல்லாம் ஒரே நொடியில் ஒரு குலுக்குக் குலுக்கிற்று. சோபாவிலே சாய்ந்துகொண்டிருந்தார் பிள்ளை. அவருடையகண்கள் சிவந்து மூஞ்சியெல்லாம் கனல் மயமாக இருந்தது. அவருடைய தோளில் சாய்ந்த வண்ணம் நளினி உட்கார்ந்திருந்தாள்.

"போதுமுன்னை, சேருங்கோ...! நாலுபாட்டிலாயிடுத்து. சும்மா இருங்கோன்னா!" என்று நளினி அவண்டு விழுந்து கொண்டிருந்தாள், பிள்ளைமேல், ஆறுமுகம் உள்ளே நுழையும்போது.

வெட்கத்தோடு தலையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு நின்றான் ஆறுமுகம்.

"இந்தாடா, இந்த சோடாவை உடைச்சு ஊத்து!" என்றார் பிள்ளை. பயத்தோடு திரும்பினான். பிள்ளை, நளினியின் தோளைப்பதம் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவளோ பேசாமல் ஒருகையால் பிள்ளையின் தலையை தடவிக் கொண்டே மற்றொரு கையை ஹாலின் கிழக்கு மூலைக்குக் காட்டினாள்.

ஆறுமுகம் அவள் கைகாட்டும் திக்கை நோக்கினான். அங்கே பாட்டில்களிருந்தன!

கைகள் வெட வெடவென்று நடுங்க அந்த மூலைக்குச் சென்றான். ஆறுமுகம்.

அங்கே ஏழெட்டுச் சோடா பாட்டில்களும் நாலைந்து மதுரச பாட்டில்களும இருந்தன.

பக்கத்திலிருந்த இரும்புத் துண்டை எடுத்து ஒரு பாட்டிலைத் திறந்தான். டபீர் என்ற சத்தத்துடன் திறந்து ஒரே நுரையாக வெளியில் விழுந்தது மது "ஐயா, என்ன சொல்றரோ" என்று பயந்து திரும்பினன் ஆறுமுகம். அவரோ அவனைக் கவனிக்கவில்லை

"இங்கே கொண்டு வா, ஆறுமுகம்!" என்ருள் நளினி.

அப்படியே எடுத்துக் கொண்டு போனன்

"ஒரு சோடா உடை" என்ருள்.

மறுபடியும் போய் ஒரு சோடா பாட்டிலை எடுத்து உடைத்து வந்தான்.

"சரி, நீபோய்ச் சாப்பிடு" என்ருள்.

ஆறுமுகம் போவதற்குத்திரும்பினன். அதற்குள் அவளே எழுந்து நின்ருள். அவளுடைய நிலைமையை அவனல் அதற்குமேல் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை.

"என்னம்மா......" என்று கூறிக்கொண்டே ஒரு அடி எடுத்து வைத்தான் ஆறுமுகம்.

நளினி பிள்ளையின் மடிமேல் அமர்ந்த வண்ணமே, "ஆறுமுகம் உனக்கு வேணுமுன்ன ஒரு பாட்டில் எடுத்துவைச்சுக்கோ! ஐயாவை பங்களாவுக்குக் கொண்டுபோய் விட்டுவிட்டு, அப்புறமா சாப்பிடு! என்ருள்.

இந்த எதிர்பாராத அன்பளிப்பு ஒரே வினடியில் அவனை ஆபத்திலிருந்து காப்பாற்றியது. துவண்டு விழும் அந்தப் பூங்கொடியைமறந்து உலகத்தையே மறக்குமளவுக்குஇன்பம் தரும் அந்தமது இருந்த மூலைக்குச் சென்ருன். ஒரு பாட்டிலை எடுத்து கோட்டையிலேதிணித்துக் கொண்டுவெளியேறினன். நேராகக் காருக்குப்போய், சீட்டுக்கடியிலே அதைப்போட்டுவிட்டு மறுபடியும் சாப்பிட வந்து உட்கார்ந்தான்.

இரவு பத்து மணி வரை அந்தப் பலகையிலே உட்கார்ந்திருந்தான், ஆறுமுகம். டபார்! டபார்! என்று சப்தம் கேட்ட வண்ணம் உள்ளே பாட்டில்கள் உடைந்தவண்ணமிருந்தன.

வயசான மனுசன் இப்படிக் குடிக்கிருரே!" என்று ஆச்சரியப்பட்டான் ஆறுமுகம் முதலில்.

"அப்பாவுக்கு இருதய நோய் அதிகமாயிடுத்து. டாக்டர் அதிகமா ட்ரிங்க் செய்யாதிங்கோன்னு செல்லிருக்காரு!" என்று மத்தியானம் புஷ்பா நல்லமுத்துவிடம் கூறிக்கொண்டிருந்தது ஞாபகம் வந்தது.

"ஐயோ... இந்த மாதிரி குடித்தால் என்ன ஆகுமோ......! என்று எழுந்தான் மறு நிமிடமே. ஹி... பெரிய முதலாளிகள் இப்படித்தானே குடிப்பார்களாம்! அவர்களுக்கு இதில் நல்ல பழக்கமாயிற்றே. அவர்கள், நிதானத்தோடு நடந்து கொள்வார்கள் என்றுதானே அவர்களுக்கு மதுவிலக்கு இல்லை என்று அரசாங்கமே சொல்லியிருக்கு!" என்று எண்ணி உட்கார்ந்து கொண்டான்.

"சில பெண்கள் எப்பேற்பட்டவனையும் தொலைச்சுடுவாங்க என்று பேசிக்கொள்வார்களே! அவர்களுக்கு எந்தளவு பணக்காரனுக கிடைத்தாலும் அவனையும் ஓட்டாண்டியாக்கி ஒழித்துவிடும் சுபாவம் உண்டு என்று கூறுவார்களே! இல்லை...! இல்லை...! நளினி அந்த வகையில் இருக்க முடியாது. அவளுக்கு தாராளமனம் இருக்கிறது. இல்லாவிட்டால் உண்ண உணவு கொடுத்து மேலுக்கு ஒரு பாட்டில் தேனமிர்தமும் கொடுத்திருப்பாளா? சேச்சே! அவளை அப்படிப்பட்ட கெட்ட பெண்களோடு சேர்க்கக்கூடாது.

எது எப்படியிருந்தால்தான் அவனுக்கென்ன? பத்து மணிக்கு ஜமதக்னி வருவதாகக் கூறியிருக்கிருர். அவர் வந்தவுடன் புறப்படவேண்டியதுதான்!

இப்படி எண்ணிக் கொண்டே தூணில் சாய்ந்தவண்ணம் உட்கார்ந்திருந்தான், ஆறுமுகம்.

ஹாலில் இருந்த கடிகாரம் பத்து மணி அடித்தது. சரியாக அந்த நேரத்திற்கு வந்துசேர்ந்தார் ஜமதக்னி.

"என்னப்பா, ஆறுமுகம்! சாப்பிட்டியா?" என்று விசாரித்துக் கொண்டே அவன் பதிலைகூட எதிர்பார்க்காமல் உள்ளே போனுர், அவர்.

ஆறுமுகம் எழுந்து நின்ருன் உள்ளே போன ஜமதக்னி ஏதோ சத்தம் போடுவது அவன் காதில் விழுந்தது

சில நிமிஷங்களில் பிள்ளையைத் தோளில் சாய்த்துப் பிடித்த வண்ணம் வெளியே அழைத்துவந்தார், ஜமதக்னி.

"ஹும்......! ஓ.........!" என்ற ஒலிகளுடன் பெருமூச்சு வாங்க தள்ளாடித் தள்ளாடி நடந்தார் உத்தமநாத பிள்ளை.

"என்னடி, இது! எழவாப் போச்சே! ஏதோ அளவா, எந்த காரியத்தையும் செய்றதில்லைப் போலிருக்கு! பைத்யக்காரப் பெண்ணயிருக்கியே!" என்று முணுமுணுத்துக்கொண்டே வந்தார் ஜமதக்னி. நளினியோ அந்த அரை நிர்வாண கோலத்தோடு தூணிலே சாய்ந்தவண்ணமே விழித்த விழி மாருமல் நின்றுகொண்டிருந்தாள்.

காரினருகில் சென்று பின்ஸீட் கதவைத்திறந்தான் ஆறுமுகம்.

காருக்குள் ஏற்றிய மறுவினடியே படுத்து விட்டார், பிள்ளை.

ஜமதக்னி அவசரம், அவசரமாக ஆறுமுகத்தைத்தட்டி "இந்தாப்பா, செலவுக்கு வைத்துக்கொள்! ஐயாவை நேரா பங்களாவுக்கு ஓட்டிக்கிட்டுப் போய் படுக்கப்போடு. போகும்போது பீச்சுரோடு வழியாப் போ. பங்களாவுக்குப் போறதுக்குள்ளே மயக்கம் தெளிந்து விடும்!"

"சரிங்க, சாமி!" என்று அவர் கொடுத்த ஒரு ரூபா நோட்டை வாங்கிக்கொண்டு காரில் ஏறினன் ஆறுமுகம். அவனும் சீக்கிரமா ஐயாவைக் கொண்டுபோய் விட்டுவிட்டு, அவன் பூஜையை ஆரம்பிக்க வேணுமே!

இருபது, முப்பது, நாற்பது! என்று காரை ஓட்டிக்கொண்டு சென்ருன். மெரினவிலே நாற்பது மைல் வேகத்திலே போனல், காற்றடிக்கும் வேகத்தைச் சொல்லவா வேணும்!

பீச்சு ரோடிலே வந்து கொண்டிருக்கும்போதுதான் ஆறுமுகத்தின் எண்ணம் சென்ற மூன்றுமணி நேரங்களிலே நடந்த விஷயங்கள் மேல் சென்றது. டவுனிலேயே மிக உயர்ந்த குடும்பமாகக் கூறப்படும் உத்தமநாதர் வீட்டிலே அவன் நினைக்காததெல்லாம் நடக்கிறது!

மகனே கமலாவைத்தேடிப்போய் விட்டான்!

மகளோ மக்கள் தலைவனைக் கட்டியணைக்கத் திட்டம் போட்டு விட்டாள்!

பெரியவரோ, தந்தையின் துணை கொண்டே மகளோடு களிநடனம் புரிகிறார்!

சேச்சே...ஆறுமுகத்தால் இந்த விசித்திரக் குடும்பப்போக்கைஉணர முடியவில்லை.

பெரிய குடும்பம் என்றால், இப்படித்தானிருப்பார்களோ?

அப்படியானால் உத்தமநாதபுரத்திற்கும் பாக்கியபவனத்திற்கும் எந்த இடத்திலே வித்தியாசம்?

ஆம்! அவர்கள் மண் குடிசையில் வாழ்கிறார்கள்; இவர்கள் மாளிகையிலே வாழ்கிறார்கள்.

அவர்கள் குடிசைக்கு எவனாவது சௌடி மொந்தை எடுத்துவருகிறான்.

இவர்கள் மாளிகைக்கு காரிலே கேஸ் கேஸாகப் புட்டிகள்போகுது!

இதைத் தவிர, யாரைவிட யார் உயர்வாக இருக்கிறார்கள்?

சுமார் அரைமணி நேரம்தான் இந்தப் பிரச்னைகள் ஆறுமுகத்தின் மனதிலே மோதிக்கொண்டிருந்தன. இவைகளுக்குப் பதில் காணவேண்டுமென்ற ஆவலில்கூட அவன்சிந்திக்கவில்லை.

பங்களாவாசிகள் தார்மீகவழிக்குச் சென்று விட்டனர். பறைச்சேரியிலே இருப்பவர்கள்தான் இப்படிக் கெட்டு அலைகின்றனர் என்று காளியம்மன் கோயிலிலே பாகவதர் அடிக்கடிகூறுவதை, ஆறுமுகம் கேட்டிருக்கிறான்! பாகவதர் சாமி கதையெல்லாம்கூறுகிறார், பஜகோவிந்தத்தின் மகிமையும், ஆண்டவனின் அருளால் மழை பெய்து நாடு வளமுறுவதையும் எவ்வளவு அழகாகக் கூறுகிறார். அவர் கூறியதை ஆறுமுகம் எப்படி நம்பாமல் இருக்க முடியும்?

அன்று இந்த நம்பிக்கையிலே திடீர்த்தாக்குதல் ஏற்பட்டது.

எங்காவது ஒழுங்கான இடத்திலே வேலை பார்ப்போம் என்று தானே பாக்ய பவனம் வந்தான். அங்கே அவன் கண்டதெல்லாம் சேரியில் இருக்கும் பழக்கம்தானே? ஒருவேளை சேரியில் மண்குடிசையில் மட்டரகமாக நடந்திருக்கலாம்! ஆனால் இங்கே இவர்கள் செய்வது மேல் பூச்சோடு கிரமமைவில் மகா மட்டமாகவல்லவா இருக்கிறது!

ஆறுமுகத்தின் மனதிலே இந்த எண்ணங்கள் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருந்தன. மாளிகையும் மண் குடிசையும் இந்த விஷயத்தில் ஒன்றுதான் போலிருக்கு, என்று எண்ணிக்கொண்டே பாக்ய பவனம் வந்து சேர்ந்தான். பங்களாவிலே எல்லோரும் தூங்கிவிட்டனர். ஒரே இருள்மயம். ஆறுமுகமே இறங்கிப் போய் வெளிகேட்டைத் திறந்துவிட்டு, காரை ஓட்டிக்கொண்டு உள்ளேபோனான்.

"ஐயா இந்தமாதிரி கோலத்திலே யாரையும் பார்க்க விரும்பமாட்டார்!" என்று எண்ணிக்கொண்டு சத்தம் இல்லாமல் மெதுவாக காரை ஓட்டிக்கொண்டுபோய் வாயிற்படி அருகில் நிறுத்தினான்.

வழக்கம் போல, இறங்கவில்லை. படுத்தபடியே இருந்தார்.

" முட்டாளாயிருக்கோமோ! " என்று எண்ணிக் கொண்டே போய் முன் வாயில் கேட்டைமாத்திரம் போட்டுவிட்டு வந்தான்.

அப்பொழுதும் முதலாளி விழித்துஇறங்குபவராகக் காணோம்.

சரிதான் இன்னும் மயக்கம் தீரவில்லை போலும், என்று எண்ணிக் கொண்டு தானே முதலாளியை அழைத்துக் கொண்டு போய் படுக்கையில் போடத் தீர்மானித்தான். இந்த இரவு வேளையிலே எதற்காகப் பாஸ்கரையும், புஷ்பாவையும் எழுப்பனும்?

தன்னுடைய உடைகளைத் தட்டி கைகளை சுத்தமாக்கிக் கொண்டுபின் சீட்டில் படுத்திருந்த உத்தமநாத பிள்ளையின்தோளில் கைவைத்தான்.

ஐயோ! ! அந்த வினாடியே ஆறுமுகத்தின் உடல் பூராவும் ஒரு உலுக்கு உலுக்கிற்று. உத்தமநாதரின் உடல் ஜில்லென்று பிணமாகக் கிடந்தது!

"ஆ.........! என்று கூச்சல் போட, அவன் அடிவயிற்றிலிருந்து எழும்பிய சப்தம் தொண்டையிலேயே வந்து அடைத்துக் கொண்டது. ஒரே வினாடியில் அவன் உடல் பூராவும் வியர்த்து விட்டது. கால்கள் நடுக்கமெடுத்து விட்டன. படாரென்று கதவை சாத்தி விட்டு தலையை வெளியே எடுத்து கொண்டான்.

உத்தமநாதப்பிள்ளை இனி பிணம்! ஒருமணி நேரத்திற்குமுன் உல்லாசபுரியிலே உலாவிய உத்தமநாதர் உயிரோடு இல்லை! மாலை ஆறு மணிக்கு பங்களாவை விட்டு ஆறுமுகம் ஓட்டிய காரில் புறப்பட்ட 'உத்தமநாத டெக்ஸ்டைல்ஸ்' முதலாளி இப்போது இருதயத் துடிப்பின்றி கிடக்கின்றார்!

நிமிஷத்துக்கு நிமிஷம் பயம் அதிகமாகிப் படபடத்தநெஞ்சோடு நாலா பக்கமும் வெறிக்க வெறிக்கப் பார்த்தான் ஆறுமுகம்.

அவன்நின்றஇடம்தான் வெளிச்சமாக இருந்ததே தவிர சுற்றி எங்கு பார்த்தாலும் ஒரே இருளாக இருந்தது. இடை இடையே கேட்ட பூச்சிகளின் ஒலி ஆறுமுகத்திற்கு இன்னும் அதிகமான பயத்தை உண்டாக்கிற்று.

இந்த நேரத்திலே யாரோ பேசுவது போல கேட்டுத் திரும்பிப் பார்த்தான். குப்பன்நின்றுகொண்டிருந்தான். "ஐயோ! அட பழிகாரனே!" அவன் தானே சிறுவயதில் ஆறுமுகத்தை வேலையில் சேர்த்துக் கொள்ளாமல் துரத்தியவன். இன்று இந்தக்கோலத்திலே நிற்கும்போதும் வந்து விட்டானே! பேசாமல் அவனைத் திரும்பிப் பார்த்தான் ஆறுமுகம்.

"என்னப்பா, ஆறுமுகம்...தூக்கமா? சரி, சரி! நீபோகும் போது முன் விளக்கை அணைத்துவிட்டுப் போ!" என்று கூறிக்கொண்டே பங்களாவின் பின் பக்கம் போனான் குப்பன்.

ஆறுமுகம் திகைத்தவண்ணமே அப்படியே நின்று கொண்டிருந்தான்.

தொடரும்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
25, Tirukkachinambi St., Kancheepuram.